# கந்த மலர்



"நீ செய்த நாடகமே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I

# நினைவிதழ்

செல்லையா

கந்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கந்தமலர்



புராணபடன வித்தகர்

## அமரர் செல்லையா கந்தையா

(முன்னாள் அதிபர், யா/ சுதுமலை வடக்கு த.க. பாடசாலை)

| மண்ணகம் | விண்ணகம் |
|---|---|
| 29.08.1920 | 20.01.2002 |

திதி வெண்பா

ஆண்டு விஷுவில்வரு தைத்திங்கள் ஏழாம்நாள்
பூண்டதிதி பூர்வபக்க ஸப்தமியாம் - ஆண்டவன்தாள்
மெய்யென்று கந்தைய மேலோன் உணர்ந்துதன்
பொய்யுடலம் விட்ட பொழுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அருட்பா



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

-திருமந்திரம்

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைமுழ வதிரும்
அண்ணாமலை தொழுவார் வினைவழுவாவண்ணம் அறுமே.

-தேவாரம்

அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமையெல்லாமும்
குன்றே அனையாய் என்னையாட் கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே!

-திருவாசகம்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனை
திருவீழி மிழலை வீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

-திருவிசைப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளேபுகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோனடி
யோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.
-திருப்பல்லாண்டு

சீராரும் சதுர்மறையும் தில்லைவாழ் அந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழுதேத்த
வாராரும் கடல்புடைசூழ் வையமெலாம் ஈடேற
ஏராரும் மணிமன்றுள் எடுத்ததிரு வடிபோற்றி.
-பெரியபுராணம்

இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
இசைந்த ஊரும் பெண்டிரும் இளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்குதீபம் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்தில் ஏறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங்கு லாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதம் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலும் தண்டையும் அழகிய பெருமானே.
-திருப்புகழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## நிறைவுற வாழ்ந்தவர்

தூயவெள் ளாடை, அறிவொளி ஏற்றும்
தொண்டினை நெடிதுநாள் செய்து
மேயஞா னத்தின் வீறுடன் பொலிந்து
விளங்குமம் முகத்திள முறுவல்;
நேயம், ஆ சாரம், பத்திமை, ஒழுக்க
நெறியொடு நேர்பட வாழ்ந்து
யோயினை தேவர் உலகமென் றிந்தப்
புவிவணங் கிடப்புகழ் நிறுவி!

'வெம்மையாம் நரகில் தம்மைஈன் றவர்கள்
வீழ்ந்திடா வண்ணம்காப் பவரே
நன்மைசெய் மக்கள்' என்றுதொல் வேதம்
நவில்வது மெய்யெனத் தெளிந்தேன்
'பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்'
எனும்பழ மொழியினுள் பொதிந்த
உண்மையும் உணர்ந்தேன் மக்களால் பொலிந்த
உன்னரும் வாழ்வினைக் கண்டு!

இறைவனைத் தொழுது கடமையைத் தவமாய்
இயற்றியிங் கவர்ந்தவர்க் குதவி
அறவழி நின்று அல்லவை விலக்கி
அயல், இன சனம், கிளை என்றே
உறவுகள் விரிய நெடுமர மாக
நிழல்தரும் ஒருவனாய் நின்றாய்!
நிறைவுற வாழ்ந்த பெருமகன்–உனது
நினைவுநம் நெஞ்சினில் கமழும்!

– சோ. பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# புராணபடன வித்தகராய்......

அண்மையில் சிவப்பேறு பெற்ற ஆசிரியர் அவர்கள் சுதுமலையை பிறப்பிடமாக வாழ்ந்து இணுவிலில் திருமணம் புரிந்து,

"அன்பும் அறனும் உடைத்தாயின் - இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்றவாறு தமது தாம்பத்திய வாழ்க்கையை சீராக வாழ்ந்த உத்தமர். இவர்கள் இருவரும் ஆசிரிய தொழில் செய்து மாணவர்கள் நன்மதிப்பையும் பெற்று சக ஆசிரியர்களின் மதிப்பையும் பெற்று வரும் நாளில் குழந்தை செல்வங்களையும் பெற்று, சீராக வாழ்ந்து வந்தார். தான் பெற்று வளர்த்த பிள்ளைகளை கல்வியூட்டி, அரச சேவைகளில் ஈடுபடுத்தி தக்க காலங்களில் அவர்களுடைய வாழ்கைகையை ஆரம்பித்து வைத்து, நல்ல பேரப்பிள்ளைகளையும் அன்போடு அரவணைத்து மகிழ்ந்த பெரியார்.

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவியகூழ்"

என்பது போல் அவருடைய பிள்ளைகளின் குழந்தைப் பருவத்தில் எப்படி வாழ்ந்தாரோ அதே போல் அவரது வயோதிபத்திலும் மனைவி பிள்ளைகளுடன் சேர்ந்து அளவளாவி வந்தார்.

ஆசிரியர் அவர்கள் சுதுமலை அம்பாள் மீதும், ஈஞ்சடி ஞான வைரவர் பெருமான் மீதும் மிகுந்த பக்தி கொண்டு கோவில் வளர்ச்சிக்காக மிகவும் பாடுபட்டு வந்தவர். அம்பாள் கோவிலில் புராண படனங்களுக்கு இவரே முன்நின்று உரை சொல்லும் முக்கியத்துவம் பெற்றவர். சிவஸ்ரீ. தி. பொன்னுச்சாமிக்குருக்களின் பிரதம சிஷ்யனாக இருந்து அவர் தனது ஆசாரம், ஒழுக்கம், நற்பண்புகள் முதலியவற்றையும் கற்று புராணங்களுக்கு உரை கூறவும் தன்னை ஆயத்தம் செய்து கொண்டவர். இவருடன் நான் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக பழகி எமது முன்னோரின் கோவில் நடை முறைகள் பற்றி எனக்கு எடுத்துரைத்தும் வேண்டிய உதவிகளும் புத்திமதிகளும் சொல்லித்தருவார். எங்கள் குடும்பத்துடன் மிக நெருங்கி மதிப்புக் கொடுத்து பழகிவந்தவர். மேலும் இவர் தனது உற்றார் உறவினரிடம் பெரும் மதிப்பும் பெற்றவர். அமரர் அவர்கள் ஒருசிலகாலம் சுகயீனமுற்று இருக்கும் வேளைகளில், இவர் கோவில் புராணப்படிப்பு வைபவங்களுக்கு சமூகமளிக்க விட்டாலும் அவரது ஆலோசனைப்படியும், குறித்த வேளையில் தனது புஸ்தகங்களையும் அனுப்பியும் தவறாது புராணப்படிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறவேண்டும் எனும் நம்பிக்கையுடையவராயும் திகழ்ந்தவர். வயோதிப காலத்திலும் ஆசார சீலராக வாழ்ந்த இவர் அம்பாளின் மணி ஒசைகேட்ட பின்பே உணவு அருந்துவார்.

**"இன் சொலால் ஈரம் அளைஇப் படிறு இலவாஞ்**
**செம் பொருள் கண்டார் வாய்ச் சொல்"**

என்றவாறு தனது வாழ்க்கையை கடைப்பிடித்து வாழ்ந்த உத்தம புருஷன். அன்னாரின் மறைவு எம்மத்தியில் மட்டுமல்ல சைவ உலகத்திற்கே பெரும் இழப்பாகும் என்பதில் ஐயமில்லை.

**"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிவு."**

ஆகவே எனது ஆழ்ந்த துயரத்தை அன்னாரின் குடும்பத்திற்கு தெரிவித்து பங்கு கொள்கின்றேன்.

ஓம்சாந்தி.

**சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக் குருக்கள்**
*சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி,*
*ஸ்ரீ நாகபூஷனி அம்பாள் தேவஸ்தான*
*பரம்பரை அர்ச்சகர், நயினாதீவு,*
*ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பிரதம குருக்கள்*
*சுதுமலை, மானிப்பாய்.*

## என் அப்பப்பா

அப்பப்பாவை யார் அழைத்தார்கள் எங்கும் காணோம். வீட்டை விட்டு எங்கே போனீர்கள். அப்பப்பா என்னை பாடசாலைக்குப் போ, போ என்று சொல்வீர்களே! இனி யார் சொல்வது. அப்பப்பா உங்களுக்கு நான் திருநீறு, சந்தனம், குங்குமம் போட்டு விட்டனான். இனி யாருக்குப் போடுவது!

அப்பப்பா உங்கள் குழந்தைகள் நல்லாய்ப் படிக்கின்றனர். நீங்கள் சுகமாக, சந்தோசமாக இருக்க நான் முருகனை வேண்டுகிறேன்.

அப்பப்பா இனி நான் உங்களைப் பார்க்க மாட்டேன். பேசமாட்டேன். எனக்கு கவலையாய் இருக்கிறது. என்றென்றும் கூட நின்று எங்களை வழி நடத்த கடவுளை வேண்டுகிறேன்.

*அப்பப்பாவின்*
*அ.சரண்ஜா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சைவசமய ஆன்மீக வழிகாட்டியாய்.....

"அத்திமுகவனை நித்தம் நினைப்பவர்
சித்த மகிழ்வொடு முத்தி பெறுவரே"

புகழ்பூத்த சுதுமலைக் கிராமத்தில் பிறந்து, ஆன்மீகப் பெரியவராக வாழ்ந்து அண்மையில் அமரத்துவம் அடைந்தவர் திரு. கந்தையா உபாத்தியாயர் அவர்கள். இல்லற வாழ்வில் இணுவில் நல்லாளை இணைத்து, அரிய பிள்ளைகளைப் பெற்று நிறைவான வாழ்வு வாழ்ந்தவர். புராணப் படிப்புப் பாரம்பரியத்தை இறக்கும் வரை காப்பாற்றிய இப்பெருந்தகையை அறிந்தவர்கள் போற்றத் தவறவில்லை. ஆசிரியராக, அதிபராக, ஆன்மீகவழிகாட்டியாக விளங்கிய இப்பெருந்தகையின் வாழ்க்கை இளைய தலைமுறைக்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளது. அவரது புனித சேவையினால் அவரது குடும்பம் கல்வி மேன்மை பெற்று இன்று விளங்குகின்றது. அவரது புத்திரர்கள் உயர்பட்டங்கள் பெற்று விரிவுரையாளர்களாக, நல்லாசிரியர்களாகத் திகழ்வது நல்லறத்தின் பயனாகும். அவரது இறுதி வைபவத்தில் ஆன்மீகம் சார்ந்தவர்கள், கல்வித்துறை சார்ந்தவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இப்பேறு வாழ்க்கையில் நெறி நின்றவருக்குக் கிடைக்கும் பேறாகும். அமரரின் குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் என்னோடு மிகுந்த அன்பு கொண்டு பழகுபவர்கள். இல்லறத் தலைவனை இழந்து கவலையுற்றிருக்கும் திருமதி. தங்கேஸ்வரி கந்தையா அவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஆறுதல் கூறி அன்னாரது ஆத்மா சாந்தி பெற இணுவில் சிவகாமி அம்பாளுடைய திருவடிகளைப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

**செஞ்சொற் செல்வன் ஆறு. திருமுருகன்**
*ஆசிரியர்,*
*யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## மண்ணிலவர் பணி வாழும்

கல்வியே செல்வமென்ற கருத்தினை நினைந்துநாளும்
கல்வியில் கவனங்கொண்டு கசடறக் கற்றதாலே
நல்லவர் போற்றுகின்ற நல்லதோர் அதிபராகி
கல்வியெனுங் கலையைக் கலினுற வளர்த்தாய்ஐயா!

சதுமலை வடக்கின் தமிழ்வித்தியாலய அதிபராகி
மெதுமெதுவாய் பாடசாலை மேம்பட வைக்கவெண்ணி
அயலுள காணிவாங்கி அமைத்தனை கட்டிடங்கள்
பயனுடன் மதிலுங்கட்டி பாங்குடன் கிணறுந்தந்தாய்.

ஐந்தேழு ஆண்டாக ஆசிரியர் அதிபராக
விந்தைமிகு வித்தினை வினையச் செய்து
சிந்தை நிறைவடைந்த செம்மல் கந்தையா
இந்தவுலகு உள்ளனவும் என்றுமிவர் வாழ்வார்.

ஆண்டொன்று முதல் பதினொன்று ஆண்டாக
எண்ணிலடங்கா இளையதலை முறைக்கேற்றினாய் கல்வித்தீபம்
அன்னவர் பலருமின்று அரும்பெரும் பணிகள் பெற்று
நின்னது புகழைப்பேசும் இனியநல் வார்த்தைகேட்டோம்.

ஆண்டறுபது அகவை நிறைவடைந்த பின்னர்
நீண்டவளர் கல்விச் சேவைதனை விட்டாலும்
ஆண்டநின் மனைவிமக்கள் அயலவர் உறவினர்க்கும்
நீண்டபுகழ் மந்திரியாய் மதிப்புடன் வாழ்ந்தாய்நன்றே.

நீங்களும் நின்துணைவியாரு மளித்த நற்கல்வியாலே
உங்களின் மக்களெல்லாம் ஓங்கினர் கல்வியிலே
அன்னவர் எல்லோரும் ஆசிரியப் பணியில்நின்று
நின்னது பெருமைகாப்பர் நிட்சயம் இதனைநம்பு

சமயத் தொண்டோடு தமிழிற்குப் பணிகளாற்றி
சைவக் கோவில்களில் சமயம் வளர்க்கவென
பெரிய புராணத்தோடு கந்தபுராணப் பாடலும் பயனும்சொல்லி
அரியபல சேவையாற்றினாய் மறவோம் நாங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதுமலை அம்மனோடு சூழவுள்ள கோவில்கட்கும்
எதுவித பயனும் கருதாதினிய நற்பணிகளாற்றி
மற்றவர் மதிக்கவாழ்ந்த மாணிக்க மலையேயுன்னை
உற்றவர் உறவுகளயலோர் உனையினி எங்குகாண்பார்!

எண்ணில்லாச் சேவைகளை இந்தநெறி வைத்தே
மண்ணில் பிறர்வியக்க வாழ்ந்ததிரு மணவாளன்
விண்ணுற்றார் விடுக்கின்றோம் கண்ணீர் ஆறு
மண்ணிலிவர் பணிவாழும் மறவோம் நாமே.

**திரு. க. சுந்தரலிங்கம்**
**ஓய்வு பெற்ற அதிபர்**

## வேண்டுதல்

எங்கு மனம் அச்சமற்றிருக்கிறதோ,
எங்கு தலை நிமிர்ந்தேயுள்ளதோ,
எங்கு அறிவுக்குத் தடையில்லையோ,
எங்கு குறிகிய சுவர்களால் உலகம்
துண்டாடப் படவில்லையோ,
எங்கு சத்தியத்தின் ஆழந்திலிருந்து
சொற்கள் ஊற்றெடுக்கின்றனவோ,
எங்கு சலியாத முயற்சி செம்மையை நோக்கித்
தன் கைகளை நீட்டுகிறதோ,
எங்கு பகுத்தறிவு என்னுந் தெளிந்த நீரோடை
உயிரற்ற பாரம்பரியம் என்ற பாலை மணலுள்
வழிதவறிப் போகவில்லையோ,
எஞ்ஞானறும் விரிந்து சொல்லும் சிந்தனையையும்
செயலையும் நோக்கி எங்கு மனம்
உன்னால் வழிநடத்தப்படுகிறதோ,
அந்த விடுதலைச் சுவர்க்கத்துள்–
என் அப்பனே!
என் நாடு விழிப்படைவதாக!

–தாகூர்
தமிழில்:சோ.ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமூகத் தொண்டராய்......

அமரர் கந்தையா ஆசிரியர் அவர்கள் சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வாழ்பதியாகவுங் கொண்டவர். தாம் கற்றுத் தெளிந்த வற்றை வாழ்க்கையில் மேற் கொண்டு கற்றாங் கொழுகிய பெரியார் வரிசையில் வைத்து மதிக்கப்பட வேண்டிய பெருமைக்குரியவர். எப்படியும் வாழலாம் என்று வாழுகின்ற சமூகத்திலே இப்படித்தான் வாழ வேண்டும் என்று நன்கு சிந்தித்து திருத்தமான நாகரிகமான சமய நெறியில் நின்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தவர். 'சமயமே வாழ்க்கை, வாழ்வே சம யம்' என்ற உறுதியான கொள்கையுடன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த ஓர் உத்தமர். நல்வாழ்வு வாழ்ந்த ஒரு பெரியாரைப்பற்றி–நன்னெறியில் ஒழுகிய ஓர் உத்தமரைப்பற்றி அவரின் ஞாபகார்த்தமாக வெளியிடும் நிறைவு மலருக்கு என் உள்ளத்தில் எழும் உணர்வுகளை சமர்ப்பிப்பதில் மன நிறைவும் ஆறுதலும் பெறுகின்றேன்.

சுதுமலையில் உள்ள ஆலயங்களும் சுதுமலை இந்து சமய விருத்திச் சங்கமும் மறைந்த ஆசிரியர் அவர்களையும் அடியேனையும் இணைய வைத்தனர். அவரின் நடத்தைக் கோலங்கள் சிறந்த சைவ சமயத்தவர் என்பதை எடுத்துக் காட்டின. ஆலயங்களுக்கு வரும் பொழுது சமய சின்னமாகிய திருநீற்றை, திரி புண்டரமாகத்தரித்து, சமய அநுட்டானங்கள் புரிந்து, பரிசுத்தராக வருவது அமரரின் வழக்கமாகும். ஆலயங்களில் நடைபெறும் நித்திய, நைமித்திய பூசைகளின் போது பஞ்சபுராணம் ஓதுவதில் ஆர்வம் காட்டியவர். பிழையின்றி, வரிசைக்கிரமம் தப்பாது பஞ்சபுராணம் ஓதுவதில் உயர் தகைமை பெற்றவராக விளங்கினார்கள்.

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் வருடந்தோறும் சித்திரை வருடம் பிறப்பை அடுத்து வரும் வெள்ளிக்கிழமையில் கந்தபுராணப்படிப்பு ஆரம்ப மாகும், திருவெம்பாவை காலத்தில் திருவாதவூரடிகள் புராணப்படிப்பு நடைபெறும். இப்புராணங்களுக்கு இரு ஆசிரியர்கள் பயன் (கருத்துரை) கூறுவது வழக்கம். ஒருவர் அண்மையில் அமரத்துவம் பெற்ற கந்தையா ஆசிரியர். மற்றவர் பல வருடங்களுக்கு முன்னர் அமரராகிவிட்ட பெரியதம்பி ஆசிரியர். இவர்களுடைய தூண்டு தலால் எனக்கும் இப்பணியில் பங்குகொள்ள சந்தர்ப்பங் கிட்டியது. சில காலங்களில் பெரியபுராணம், சிவராத்திரி புராணம் போன்ற புராணங்களும் படித்து பயன் கூறப்பட்டது. அக்காலங்களில் அமரர் கந்தையா ஆசிரியர் அவர்கள் கருத்துரை வழங்குவதில் வல்லபம் உள்ளவராகவும் சமயப் பணியாற்றுவதில் சிறந்தவராகவும் விளங்கினார்கள்.

சுதுமலை இந்து சமய விருத்திச்சங்கத்தில் அதன் ஆரம்காலத்திலிருந்து உறுப்பினராக பங்குகொண்டு நற்பணி ஆற்றியவர். எமது சங்கத்தின் சார்பில் நடைபெறும் கூட்டுப்பிரார்த்தனைகளிலும் சமய குரவர்களின் குருபூசைத் தினங் களிலும் பங்கு கொண்டு குழந்தைகளுக் கேற்றவகையில் இலகு தமிழில் பேசி அவர்களை ஊக்கப்படுத்துவதில் திறன் மிக்கவராக தமது ஆசிரியத் தொழிலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்துவத்தை வெளிப்படுத்தியவர். ஆலயங்களில் புராணபடனஞ் செய்யும் போதும் திருமுறைகளை ஓதும் போதும் பக்தி பரவசமாக நிகழ்த்துவதைக் கண்டு அவரது பக்தியின் மேன்மையை என்னால் உணரமுடிந்தது. அயற்கிராமங்களிலுள்ள பெரியார்களின் வேண்டுகோளுக்கிணங்கி அக்கிராமங்களிலுள்ள ஆலயங்களுக்குச் சென்று புராணபடனஞ் செய்துவருவதை யான் நன்கறிவேன். எதுவித பலனையும் எதிர் பாராது தெய்வத்தின் திருவருளை மட்டும் வேண்டி நற் சேவையாற்றியவர் அமரர் கந்தையா ஆசிரியர் அவர்கள் அவரின் சேவைகளும், நற்பண்புகளும், பழக்க வழக்கங்களும் மக்களுக்கு முன் மாதிரியாக விளங்கியமையை அனைவரும் அறிவர். அவரின் மறைவு சைவ மக்களுக்கு பேரிழப்பாகும் என்று கூறுவதில் சிறிதும் சந்தேகமில்லை.

சிறப்பான குடும்பத் தலைவரை—நல்லதோர் ஆசிரியரை நல்லதோர் அதிபரை—சைவப்பற்று மிக்க பெரியாரை கல்வி அறிவு கேள்விகளில் சிறந்த சீரிய பண்பாளனை இழந்து துன்பத்திலாழ்ந்துள்ள மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர் ஆகியோரின் துயரத்தில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தி பெறவும்—நன்னிலையடையவும் எல்லாம் வல்ல இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றேம்.

"சுபம்"

ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

திரு. சே. பொன்னம்பலம்
தலைவர்,
சுதுமலை இந்து சமய விருத்திச் சங்கம்.

## அப்பப்பாவை எங்கு காண்பது!

அப்பப்பா எனக்கு எல்லாம் சொல்லித்தருவார். இனி அப்பப்பாவை பார்க்கமுடியாது. அவர் எங்களுக்கு தெரியாதவற்றைச் சொல்லித் தருவார். இப்போது எனக்கு தெரியாதவற்றை ஒருத்தரும் சொல்லித் தரமாட்டார்கள். அப்பப்பா என்னிடம் பாடசாலை போனனியா? சாப்பிட்டாயா? என்றெல்லாம் கேட்பார். இனியார் கேட்பது நீங்கள் சந்தோசமாக இருக்கவேண்டும் என்று முருகனை வேண்டுகின்றேன். எனக்கு கவலையாக இருக்கிறது. அப்பப்பா உங்களுடைய கதிரையையும் கட்டிலையும் பார்க்க நீங்கள் இருப்பதுபோல தெரிகிறது. அப்பப்பா உங்களை நான் இனி எங்கு காண்பது!

அப்பப்பாவின்
அ.சாரங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமயத் தொண்டராய்......

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்று கூறும் தமிழ் வேதமாகிய திருக்குறள் எமக்கு கூறுவது என்னவென்றால் மனிதராய் பிறக்கின் புகழுக்கு ஏதுவாகிய நல்ல குணத்தோடு பிறந்து தனக்காகவும் பிறர்க்காகவும் வாழ்ந்து மகத்தான மானிடப் பிறப்பை மகிமைப்படுத்த வேண்டும் என்பதாகும். இந்தவகையில் சைவப்பெரியார் செல்லையா கந்தையா அவர்கள் தனக்காகவும் பிறருக்காவும் அறவழி நின்று அரும் பணியாற்றி புகழோடு வாழ்ந்த இறையருள் பெற்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

இப்பெரியார் பல பணிகளை செய்தார். ஈஞ்சடி ஞானவைரவர் திருக்கோவிலில் இவர் செய்த பணிகள் காலம் அறிந்து அதன் தேவை உணர்ந்து செய்தவையாகும். இவ்வாலயம் மிகவும் பின் தங்கி இருந்த வேளையிலே, 30 ஆண்டுகளுக்கு முன்பாக இவ்வாலய புனருத்தாரண வேலைகளுக்காக திருப்பணிச்சபை ஒன்றை அமைத்து; அதன் தலைவராய் செயல் பட்டு; 1978 இல் மங்களகரமாக பக்தி சிரத்தையோடு மகாகும்பாபிசேகம் நடைபெற வைரவப் பெருமான் திருவருளால் திருப்பணிகள் செய்து; இவ்வாலய வளர்ச்சியில் புதிய திருப்பத்தை—புத்தெழுச்சியை ஏற்படுத்தியவர். இப்பணிகளை பொறுமையோடும் பணிவோடும் செய்துவந்தவர். இவ்வாலய நித்திய பூசைக்காலங்களிலும் கலந்து கொண்டு திருமுறைகள் ஒதி, விழா ஒழுங்குகளை கவனித்து விழாக்களை சிறப்பித்தவர். இவ் வாலய பரிபாலசபை உறுப்பினராகவும், இதன் தலைவராகவும் விளங்கி சபையை நல்வழியில் அழைத்துச் சென்று இவர் ஆற்றிய பணிகள் இன்றைக்கு இவ்வாலயம் பேராலயமாக, அருளாட்சி நிறைந்த ஆலயமாக அழகுற விளங்குவதற்கு அத்திவாரமாய் அமைந்து ஈஞ்சடிப்பதி பொலிவுற விளங்க காரணமாய் அமைந்தவர்.

இப்பேர்ப்பட்ட பெரியார் மிகவும் இயலாத நிலையிலே இருந்த போதும் சென்ற ஆண்டு ஆடி மாதம் ஈஞ்சடி ஆலயத்தில் சமயப் பெரியர் திருவாளர் ஆசிரியர் பொன்னம்பலம் ஐயா அவர்களுக்கு அவர் செய்த சமய சமூகப் பணிகளை யிட்டு எடுத்தவிழாவுக்கு; எமது அழைப்பை ஏற்று விழாவுக்கு தலைமை தாங்கி பொன்னம்பலம் ஐயா அவர்களின் சேவையை பாராட்டி, உரையாற்றி, பொன்னாடை போர்த்தி மாலையணிவித்து பாராட்டுப்பத்திரம் கையளித்து விழாவை சிறப்பித்த, மனவைராக்கியமுடைய சைவசமய ஆசாரசீலர். இதனை நினைக்கும் போது, இவரது பிரிவு எமக்கு மிகவும் வேதனையளிக்கிறது. மரணம் என்பது ஆன்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை புதுப்பிக்கிறது என்கிற பேருண்மை எமக்கு ஆறுதல் அளிக்கிறது.

இப்பெரியாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தார் மனசாந்தி பெற்று ஆறுதல் அடைந்து நல்வாழ்வு வாழவும், இப்பெரியாரின் ஆன்மா இறைவனின் திருவடி நிழலிலே சாந்தி பெற்று நித்திய பேரின்பப் பெருவாழ்வு வாழவும் எல்லாம் வல்ல ஈஞ்சடி சாமுண்டாம்பிகா சமேதவைரவேஸ்வரப் பெருமானின் திருவடிகளை வாழ்த்தி வணங்குகின்றோம்.

**திரு. இ. பேரின்பநாயகம்**
முன்னாள் தலைவர்,
சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர்
தேவஸ்தான பரிபாலனசபை.

*பண்ணேன் உனக்கான பூசையொரு வடிவிலே*
*பாவித் திறைஞ்ச ஆங்கே*
*பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தியப்*
*பனிமலர் எடுக்க மனமும்*
*நண்ணேன் அலாமலிரு கைதான் குவிக்கவெனில்*
*நாணும் என் உளநிற்றி நீ*
*நான்கும் பிடும்போ தரைக்கும்பிடாதலால்*
*நான் பூசை செய்யல் முறையோ*
*விண்ணேவிண் ஆதியாம் பூதமே நாதமே*
*வேதமே வேதாந்த மே*
*மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்*
*வித்தே அவ்வித்தின் முளையே*
*கண்ணே கருத்தேயென் எண்ணே எழுத்தே*
*கதிக்கான மோன வடிவே*
*கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு*
*கருணா கரக்கடவுளே!*

- தாயுமானவர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வாழ்வாங்கு வாழ்ந்த பெரியாராய்......

"பணியுமா மென்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஒப்ப, கந்தையா உபாத்தியாயரது பணிவுடைமை அவரது பெருமையைப் பாரெங்கும் பரப்பி நின்றது. குறிப்பாக ஈஞ்சடிப்பதி அவரது பிறப்பால் வாழ்க்கை முறையால் வளமும் புகழும் பெற்றது. பழைமை போற்றும் பண்டிதர்கள் சிலர் புதுமையை ஏற்ப தில்லை, புதுமை போற்றும் வித்தகர்கள் சிலர் பழைமையை ஏற்பதில்லை ஆனால் பண்டிதர் கந்தையா உபாத்தியாயரோ, பழைமை–புதுமை இரண்டிலும் ஒப்பியல் கண்டு ஊருடன் கூடி வாழ்ந்தவர். இதனால் அவர் ஊரவர் மனங்களிலெல்லாம் செயலால்–சிந்தையால் அறிவொளியூட்டிய ஒரு கண்ணியமான பெரியார் என்பது உண்மை.

இலக்கியம்–இலக்கணம், வேதாந்தம்–சித்தாந்தம், புராணம் இதிகாசம் இவைகளைக் கசடறக் கற்றது மட்டுமன்றிக் கற்றாங்கு ஒழுகிய கனிவான குணத்தினர். சிறுவர், இளைஞர், பெரியோர், வயோதிபர் என்ற பேதமின்ற நாடிச் செல்வோரை இன்முகம் காட்டி இனிய மொழி கூறி இங்கிதமாய்பழகி, இயன்ற உதவி செய்வதில் வல்லவர். குறிப்பாகச் சிரித்த முகத்துடன் செய்திகளைப் பரிமாறிச் செவ்வனவே செயலாற்றும் சீராளர். இத்தகு கண்ணியங்கள் நிறைந்த ஒரு பெரியார், எமது, கூட்டுப் பிரார்த்தனை சபையின், ஏற்றத்திற்குத், தன் இறுதிக்காலம்வரை, அயராது பணியாற்றி வந்தார்.

குறிப்பாகக் கடந்த வருடம் ஆலயம் வருடாந்த அலங்காரத் திருவிழாவின் நிறைவில் தனது தளர்வுற்ற உடல் நிலையிலும் தளராத மனம் கொண்டு ஈஞ்சடி ஞானவைரவர் ஆலயம் வந்து தனது பதிவாழ்மக்களுக்கு நல் ஆசிகள் கூறிப், பொன்னாடை போர்த்தி எமது கூட்டுப் பிரார்த்தனை சபைக்கு ஆசிகள் நல்கி அன்புரை பகர்ந்தது என்றும் எம்மவர்களால் எண்ணப்படும், உள்ளங் கொள்ளப்படும். என்பது உண்மை

ஆசிரியர் அவர்களது ஆன்மா எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமானின் பாதகமலங்களில் நித்திய ஆனந்தம் பெற்று இன்பமடையும், அவர்களது பிரிவால் துயருறும் அவரது மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவிர் ஆறுதலடையவும் பிரார்த்திப்போமாக.

சாந்தி! சாந்தி! சாந்தி!

**கூட்டுப்பிரார்த்தனை சபையினர்,**
ஈஞ்சடி ஞான வைரவர் திருக்கோயில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சைவப்பெரியார் பெற்றபேறு

'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது அதனிலும் அரிது கூன் குருடு செவிடு பேடு நீங்கி பிறத்தல் அரிது கூன் குருடு செவிடு பேடு நீங்கி பிறந்தகாலையும் ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது ஞானமும் கல்வியும் நயத்த காலையும் தானமும் தவமும் செய்தல் தான் அரிது தானமும் தவமும் செய்வாராயின் வானவர் நாடி வழி திறந்திடுமே' என்ற ஔவைப் பிராட்டியின் அமுத வாக்கிற்கு ஏற்ப தமக்கு கிடைத்த மானிட வாழ்வை பயனுற வாழ்ந்த சிவனடியின்கிழ் அமரர் செல்லையா கந்தையா அவர்களாகும்.

இப்பெரியார் பிற்காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்தார். பெரியோர்களுக்கு நோய்வருவது புதினமல்ல. ஆதிசங்கரர், ரமணமகரிசி, ராமகிருஸ்ணபரமகம்சர் போன்றவர்களை கொடிநோய் பீடித்ததை எல்லோரும் அறிவர். பிள்ளைக்கு விழும் அடியை தாய் தாங்குவதுபோல தம்மை சார்ந்தவர்களின் துன்பங்களை இவர்கள் ஏற்றுக்கொள்கிறர்கள். இதுவே உண்மை இவர் தன்னையும் தன் குடும்பத்தையும் விளங்க வைத்து தான் பிறந்த ஊரையும் சமூகத்தையும் ஏற்றம் பெறவைத்து நற்பணியாற்றிய பெருந்தகை. இவர் செய்த பணிகள் தென்னம் பிள்ளைக்கு நீர்வார்த்து வளர்த்துவிட அத்தென்னை மேலோங்கி வளர்ந்து நல் இளநீரையும் காய்களையும் தாராளமாய் தருவதற்கு ஒப்பானதாகும்.

அன்னார் பொறுப்புள்ள குடும்பத்தலைவராக, நல்லாசிரியனாக, திறமைமிக்க தலைமையாசிரியராக, சிவத்தொண்டாற்றும் சிவத்தொண்டராக, "உழுதுண்டு வாழ்வரே வாழ்வார்–மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்ற தமிழ் முனிவரின் வேதவாக்கிற்கேற்ப ஆரம்பகாலம் முதல் இறுதிக்காலம் வரை உணவுற்பத்தியில் ஈடுபடும் பண்பு மிக்க விவசாயியாக, சைவ ஆசாரங்களை ஒழுங்காக கடைப்பிடித்து வாழும் உத்தம சைவ சமயசீலராக, புராண, இதி காசங்களை ஓதுபவராக, பொருள் கூறுபவராக விளங்கி குடும்ப காரியங்களையும் சமய சமூக காரியங்களையும் மகிழ்ச்சியோடு இதய சுத்தியோடு அடக்கத்துடன் உடல் வலு உள்ளவரை வைராக்கியத்துடன் செய்து வந்தவர்.

ஈஞ்சடி ஞானவைரவர் திருக்கோவில் திருப்பணிச்சபை தலைவராகவும், பரிபாலசைபை உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்து இவ்வாலய வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றியவர். பூவுலகில் செல்லையா செல்லாச்சி பிள்ளையான அவர் இன்று விண்ணுலகில் பார்வதி பரமேசுவரரின் பிள்ளையாகும் பேறுபெற்று விட்டார்.

இப்பெரியார், பெற்ற பேற்றினால் அம்மையப்பரின் திருவடிநீழலிலே சாந்தி பெற்று என்றும் மாறாத நித்திய பேரின்ப பெருவாழ்வு அடைந்துள்ளார். இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவால் துயருறும் குடும்பத்தார் உற்றார், உறவினர், அயலார், ஊரார், எல்லோரும் மன ஆறுதலடைந்து மன சாந்திபெற்று நல்வாழ்வு வாழ, எல்லாம் வல்ல அம்மையப்பராகிய பார்வதி பரமேஸ்வரரின் திருவடிகளை வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

**சுதுமலை ஈஞ்சடி,**
**ஞானவைரவர் தேவஸ்தான**
**பரிபாலனசபையினர்.**

## *சிவகதி*

*சின்ன வயதில் சிணுங்கியழும் போது*
*சிரித்த முகத்துடனே சங்கீதம் பாடி*
*அன்புடனே அரவணைத்து கல்வியூட்டி*
*பண்பாக வளர்த்தாரே எங்கள் அப்பா.*

*மானிப்பாயில் மருதடி விநாயகர் காட்டி*
*மாவையில் கந்தனின் வேட்டை காட்டி*
*மஞ்சத்தடியில் முருகன் மஞ்சம் காட்டி*
*மஞ்வனப்பதியில் முருகன் வேல் காட்டி.*

*சுதுவையில் கண்ணகை அம்மன் காட்டி*
*சுகம் தரும் ஈஞ்சடி வைரவர் காட்டி*
*சந்நிதியில் சண்முகனின் அன்னதானம் காட்டி*
*சத்தி சிவகாமி அம்மனின் வடிவம் காட்டி.*

*நல்லூரில் அலங்காரக் கந்தன் காட்டி*
*நயினையில் நாகபூசனி அம்பாள் காட்டி*
*தலை நகரில் தன்னேரில்லாத் தலைவன் காட்டி*
*கலை உருவில் கதிர்காமக் கந்தவேள் காட்டி.*

*கந்தன் புகழ் பாடி நின்றீர்*
*கற்றவரும் மற்றவரும் போற்ற வாழ்ந்தீர்*
*சீரிய சித்தாந்த வழி வாழ்ந்து நின்றீர்*
*'சிவ சிவ' என 'சிவ கதி' அடைந்தீரே.*

*- அப்பாவின் மணி -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கடவுள் நம்பிக்கையில் அமரர் திரு. செ. கந்தையா

திரு. கந்தையா உபாத்தியாயர் அவர்கள், ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள், மருதடி விநாயகர் ஆலயச் சூழலில் பிறந்து அவர்களின் நம்பிக்கையுடன் கல்வி பயின்று சிறந்த நற் குணங்களினை அணிகலன்களாகப் பூண்டு எல்லோராலும் போற்றத் தக்க வண்ணம் வாழ்ந்து 20.01.2002 அன்று இறைபதம் எய்தினார்.

ஆனால், அவர் சைவசமயத்திற்கு ஆற்றிய பணிகள் மக்கள் மனதில் நிலை கொண்டுள்ளது.

அவர் அன்பு, அறிவு, அமைதி, சைவ சமய சிந்தனைகள் உடைய ஓர் பெருந்தகையாக மக்களினால் போற்றப்பட்டார். இவர் மருதடி விநாயக ஆலயத்திலும் தன் இல்லச் சுற்றாடலிலும் உள்ள ஆலயங்களிலும் பிள்ளையார் கதை, மற்றும் புராண, இதிகாசங்களினை பக்தி சிரத்தையுடன் படித்தும் பயன் கூறியும் மனச் சாந்தியடைந்தார்.

அவர் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சபையின் அங்கத்தவராக இருந்து சைவ சமயீயாக வாழ்ந்தார். உபாத்தியாயர் அவர்கள் ஓர் பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆவார். கணித பாடம் கற்பிப்பதிலும் வல்லவர். சுதுமலை வடக்கு, தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியராகவும், அதிபராகவும் சேவை புரிந்து வந்தார். இவர் இப்பாடசாலையில் முன்னேற்றத்திற்கு அரும் பெரும் பாடுபட்டார். கட்டிடம் கட்டும் போது செலவழித்த கணக்குகளினையும், பற்றுச்சீட்க்களினையும் கவனமாக பேணி வைத்துள்ளார் என அறிகிறேன்.

இவரின் கடவுள் நம்பிக்கை, சமயத்திற்கு ஆற்றிய சேவை, ஆசிரிய கடமையினை கண்ணியமாக ஆற்றிய பலனினால் அவரின் மக்கட் செல்வங்கள் ஆசிரியர் களாக மக்கள் போற்றும் வகையில் வாழ்வதைப் பார்த்து, பூரண வாழ்க்கையினை வாழ்ந்தார்.

அவரின் துணைவி, மக்கட் செல்வங்கள் உபாத்தியாயரின் வழிகாட்டலின் கீழ் நற்பிரஜைகளாக வாழ்ந்து வருகின்றனர். அமரரின் நற்சிந்தனைகளுக்கமைய அவர்களும் பூரண வாழ்க்கை வாழ வேண்டும் எனவும், உபாத்தியாயரின் ஆத்மா சாந்தி அடைய வேண்டும் எனவும் மருதடி விநாயகரைப் பிராத்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

**திரு. க. சிதம்பரநடராசா**
*தலைவர்,*
*மருதடி விநாயக ஆலய தர்மகர்த்தா சபை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆசிரிய சேவைக்கு ஓர் உதாரண புருஷராகத் திகழ்ந்தவர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற குறளிற்கு இணங்க எமது சுதுமலைக் கிராமத்திலே செல்லமாக அழைக்கப்படும் "கந்தையா உபாத்தியார்" அன்புக்கும் மதிப்பிக்கும் உரிய ஆசிரியர். அமரர் செ. கந்தையா அவர்கள் இன்று எம்மிடையே இல்லை என்பதை நினைக்க மனம் வேதனை அடைகின்றது. அவர் ஆசிரிய சேவையிலும் கோயில் திருப்பணியிலும் தன்னை ஈடுபடுத்தி கிராமத்து மக்களின் நலன்களிலே அக்கறை கொண்டு வாழ்ந்ததோடு எளிமையான வாழ்க்கை வாழ்ந்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாக திகழ்ந்தவர் என்பதும், மாணவர்களிடத்திலும் உயர்வான மதிப்பைப் பெற்றமையும் அவர் தம் இறுதி ஊர்வலத்திலும், அவரது இரங்கலுரை ஆற்றிய பிரமுகர்களின் வாயிலாகவும் ஆசிரிய சேவைக்கு ஓர் உதாரண புருஷர் என்பதை அறிந்து கொண்டோம். இது எமது கிராமத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

இவர் எமது பாடசாலையின் பழைய மாணவர் அக்காலத்தில் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில்(S.S.C) சித்தியடைந்த மாணவர்களுள் ஒருவராவர் அத்துடன் இவ்வாசிரியர் எங்கள் பாடசாலையில் பதின்மூன்று வருடங்களாக சேவையாற்றியமை நினைவு கூறத்தக்கது. அக்காலங்களில் மாணவர்களுக்கு தமிழ்மொழி, கணிதம், சமயம், ஆங்கிலம் போன்ற பாடங்களைக் கற்பித்துள்ளார். தாம் கற்பிக்கும் மாணவர்களை தம் சொந்தப் பிள்ளைகளைப் போல நினைத்து சிறந்த அறிவையும் நற்பழக்க வழக்கங்களையும் ஊட்டி, சிறந்த நல்ல மாணவ சமுதாயத்தை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர். என்பதை அவரிடம் பாடம் கற்ற மாணவர்களுள் ஒரு சிலர் எங்கள் எங்கள் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றனர். அவ்வாசிரியர்களின் வாயிலாக கந்தையா ஆசிரியரது உயர்வான பண்பினையும், பணிகளையும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. தன்னிடம் கற்கும் மாணவர்கள் யாவரும் பரீட்சையிலே சித்தியடைய வேண்டும். என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு தம் சேவைதனை விடுமுறை நாட்களிலும், ஓய்வான மாலை வேளைகளிலும் சம்பந்தப்பட்ட மாணவர்களை அழைத்து தனியாகவும், குழுவாகவும் நடாத்தி வெற்றி கண்டவர். அவர் மாணவர்களிடத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் நல்லதைச் செய்ய வேண்டும், நல்லதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்க வேண்டும் என்று அடிக்கடி கூறி, அன்பான கண்டிப்பினால் மாணவர் களைத் தன்வசம் இழுத்து மாணவர்களின் பிரச்சனைகள், தேவைகள் என்பவற்றைக் கேட்டறிந்து, பரிகாரம் காணும் விதத்தில் பெற்றோர்களுடன் தொடர்பு கொண்டு சேவைதனை நிறைவு செய்த சிறந்த ஆசிரியர் என்று கூறுவது மிகையாகாது.

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பதை ஆசிரியர் உணர்ந்ததாலே,

**"தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தால் காணப்படும்"**

என்ற வள்ளுவர் வாக்குக்கு இணங்க அவர் தம் பிள்ளைகள் யாவரும் இன்று கல்வி உலகில், எமது பிரதேசங்களிலே ஆசிரியர்களாக கடமையாற்றி வருவது பெருமைக்குரியது. உதாரணமாக அவரது அன்பு மகள் திருமதி. சோமேஸ்வரி அமரசிங்கம் அவர்கள் தந்தையைப் போல சிறந்த ஆசிரியையாக கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் சுதுமலை அம்மனிடத்தில் மிக்க இறைபக்தி உடையவராய் இருந்தார். ஆலயங்களில் நடைபெறும் பூஜை, உற்சவங்களில் தவறாது வந்து தரிசிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். குறிப்பாக கோயில்களிலே பஞ்ச புராணம் ஓதுதல், புராணபடனம் வாசித்தல், பயன் சொல்லுதல், கோயில் சரியைத் தொண்டுகளில் மிகுந்த அக்கறை கொண்டு செயலாற்றி வந்தமை சிறந்த தொண்டாகும். எமது பகுதியைச் சேர்ந்த கோயிற் திருப்பணி சபையினரும், தர்மகர்த்தா சபையினரும் கந்தையா உபாத்தியாரது சேவைக்கு ஈடாக ஒருவரு மில்லையே என மனத்தாக்கம் உடையவராக கவலை கொண்டுள்ளார்கள்.

ஆசிரியத் தொழிலைச் சேவை நோக்குடன் சிறப்பாகச் செய்து எல்லா ஆசிரியர்களுக்கும் ஓர் உதாரணமாகத் திகழ்ந்தார். இவரின் இழப்பு எமது கிராமத்திற்கும், குறிப்பாக இவரின் பிரிவால் துயருறும் இவரது மனைவிக்கும், பிள்ளைகள், உறவினர்களுக்கும் எனது சார்பிலும், எமது பாடசாலைச் சமூகம் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் திருவடிகளை பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**திரு. செ. குபேரநாதன்**

*அதிபர்,*
*மானிப்பாய், யா/சுதுமலை சிந்மயபாரதி*
*வித்தியாலயம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## அப்பாவின் சில நினைவுகள்

சுதுமலை அம்மன் கோவில்; வயலும், குளமும், மருதமரங்களும் அரச ஆல மரங்களும், விழுதுகளும் வயலைச் சுற்றியுள்ள பனை, தென்னை தோப்புகளும் மார்கழி மாத வெள்ளத்துள் காணும் காட்சி, நினைவில் வரும் அப்பாவை நினைற்கும் போது, திருவெம்பாவைக் காலம் அப்பாவின் திருவாதவூரடிகள் புராண படனம் ஓதும் குரல் காதில் கேட்கும் மணிவாசகரின் தேன் தமிழும் செம்மனச் செல்வியின் பிட்டும் அப்பாவின் வரவை இனிமையாக்கும்

நெல் அறுவடை முடிய வசந்த காலம் வந்துவிடும். கந்த புராணப்படிப்பு ஆரம்பித்துவிடும். சோளகக்காற்றுக்கு பட்டங்கள் எழுப்பும் விண்ணொலியும், கோயில் மணியும், கோயில் திருவிழாக் களும் பேசும் கதைகள் அனந்தம். போட்டித்திருவிழாக்கள், சிகரங்கள், மின்விளக்குகள், வாணவேடிக்கைகள், குதிரை வாகன திருவிழா, பதினொராம் திருவிழா அம்மனின், கேதார கௌரி சிவலிங்க சாத்துப்படி, 12ம் திருவிழா சயன சாத்துப்படி, தேரும் பொங்கலும், தீர்த்த யாத்திரை செல்லும் ஐந்து தெய்வங்களும் கண்ணுக்குள் நிறையும். திருவிழா முடிந்தாலும் அப்பாவின் கந்தபுராண படனம் தொடரும் பல மாதங்கள். சூரபன்மன் வதைப் படலம், தெய்வானை அம்மன் திருமணம் மற்றும் வள்ளி அம்மன் திருமணப் படலங்கள் விடிய விடிய மாவிளக்குடன் நிறைவுறும்.

சிவன் கோவிலில் தொடரும் திருவிளையாடற் புராண படனமும் பெரிய புராணமும் அப்பாவின் மாலை வேளைகளை கோவிலோடு இணைத்துவிடும். இடையில் சுதுமலை ஈஞ்சடி வைரவ கோயில் திருவூஞ்சல் ஆடிப்பொங்கலில் ஓதும் காட்சியும் நினைவுக்கு வரும் பாடசாலை விட்டவுடன் கோயில் படிப்பும் அதை தொடர்ந்து தோட்டம், வயல், ஆடு, மாடுகள் என்று அவர் பொழுது கழியும். கோயிலோடு தோட்டம் துரவுகளிலும் மாட்டுத் தொழுவத்திலும் மரவள்ளி நெல் வயல்களிலும் எம்மையும் ஈடுபடுத்துவார். இரவிலோ சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம் என்று பாடம் தொடங்கி விடுவார்.

ஆங்கில பாடத்தை படிப்பிக்கவென அவர் எடுத்த அக்கறை; சுதுமலை தியாகராஜா ஐயர் முதல் மானிப்பாய் டோறத்தி ரீச்சர் என பலரிடம் பாடம் கேட்க அனுப்புவார். சைக்கிளில் கூட்டிச் செல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கூறிய சமய தமிழ் இலக்கிய கதைகள், ஐந்தாம் வகுப்பில் சுதுமலை சிந்மய பாரதி வித்தியசாலையில் படிப்பித்த 'இலவு காத்த கிளிப்பாடலும்' 'சின்ன சின்ன வண்டி கட்டி' என்ற நாட்டார் பாடலும் நளவெண்பாவும் இன்றும் உள்ள நினைவுகள். ஆறுமுக நாவலரின் இலக்கணச் சுருக்கம், சைவசித்தாந்த விளக்கம் என்பன இளமையில் என்னுள் ஆழப்பதிந்தது அப்பாவால்தான்.

வெள்ளை நாஷனல், வெள்ளை வேட்டி, சால்வை, நெற்றியில் விபூதியும், பொட்டும் இது அவர் பள்ளி செல்லும் காட்சி. கோவிலுக்கு போக 5 சதம், தீபாவளிக்கு வெள்ளைச் சேட், நீல காற்சட்டை, பொங்கலுக்கு ஒரு வெடிப்புத்தகம்- இது அவரது சிக்கன சித்தாந்தம்.

அதிகாலை படிப்பு அவசியம் என்பார். தோட்ட வேலைகளும் படிப்பும் முக்கியம் என்பார். வேலை அலுப்பில் இலாம்பின் முன் தூங்கி விட்டால் கண்டிப்பு தப்பாது. பழைய தாய் மனைத்திண்ணையில் ஆங்கில எழுத்துக்களை நிலவொளியில் பாடம் கேட்ட நாட்கள்; முற்றத்து பலா மர இலைகளோடு நிலவொளி துளைத்து வந்து வெள்ளை மணலில் பொட்டுப் பொட்டாக வட்டம் போட்டிருக்கும் காட்சியும், மாடுகளின் கதறலும், ஆடுகளின் கத்தலும், பாடத்தை மறக்கவைக்கும். ஆனால் அப்பாவின் கண்டிப்பு காலத்தை நிமிர வைக்கிறது.

பிற்காலத்தில் அப்பாவின் கோயில் அடிப்படைகளையும், சிக்கன போக்குகளையும் கேள்விக்குள்ளாக்கி எனக்குள் முரண்பட்ட போதும், குடும்பப் பொறுப்பும் நாட்டுச் சூழ்நிலையும் அந்நியத்தோடு அந்நியோன்யத்தையும் தந்தது. இலக்கிய, நாடக உலகம் எமது பறப்புக்களை பண்பாட்டு மையத்துள் இழுத்து வந்து மீண்டும் அப்பாவின் உலகில் சரணடைய வைத்தன.

இன்று அப்பாவின் உலகம் எமக்குள்ளே அண்டவெளியாய் விரிகிறது. அப்பா என்றும் சிரஞ்சீவியாய் எம் ஆளுமையில் உறைந்து வழிகாட்டியாயிருப்பார்.

– கண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## எங்கள் மாமாவே!

மாமாவே எங்கள்கண் மணியினைப் போன்றவரே
தீமைகள் செயதுஞ்சுந் தூயவோர் ஆத்மாவே
சுதுமலை வடக்கிங்கே துயரத்தில் மூழ்கிடவே
அதிபராம் உந்தனைநாம் இழந்தது பேரிழப்பே!
செல்லையா, செல்லாட்சி தந்ததோர் நல்முத்தே
கல்லார்க்கு வழிகாட்டுங் கந்தையாப் பெரியோரே
சங்கரப்பிள்ளை செல்லம்மா தேர்ந்தெடுத்த மருகரே
தங்கேஸ்வரி தனையுந்தன் துணைவியாய்ப் பெற்றவரே
எங்கையா போனீர் எதற்கெமைக் கதறவிட்டீர்
மங்காத துயர்தந்தே மறைந்தனையே ஐயய்யோ!
புவனேஸ்வரி உந்தன் பிள்ளை சோமேஸ்வரி
சிவனேஸ்வரி தானுமிங்கே தீராத துயருற்றாள்
உன்மகனாம் ஸ்ரீகணேசன் உத்தமனாம் ஸ்ரீகந்தவேள்
நன்மதிப்பைத் தினம்வேண்டும் சித்தீஸ்வரி ஸ்ரீகந்தகோபன்
என்னபிழை புரிந்தார் அகிலாண்டேஸ்வரி, கருணாகரன்
இன்னல்தனைப் பெற்றே உமக்காகக் கதறுகிறார்.
சகோதரர் நாகம்மா, செல்வரத்தினம், பரமேஸ்வரி
மிகையாக வருந்துகின்ற சிவப்பிரகாசம், சின்னராசா
தியாகராஜா தானும் துயருற்றார் ஐயய்யோ
தயாபரரே எங்கள் துயர்தீர்க்க வாராயோ!
அமரசிங்க மருமகனும் அன்புகொண்ட சிவகுமாரும்
உமக்காக அழுதோயும் சண்முகராஜன் செல்வகுமாரி,
கதிர்காமநாதன் துயர்கொண்ட செல்வலட்சுமி தானும்
அதிர்ச்சியே கொண்டார்கள் அம்மானே உன்பிரிவால்!
மைத்துணர் மீனாம்பாள், இரத்தினம், கமலம்,
பைத்தியம் போலான மகேஸ்வரி கயிலநாதன்
சிதம்ப ரேஸ்வரியும் பேரர் சஜீந்திரனும்
கதறும் சரண்ஜா, சாரங்கன், துவாராகா, சாஜீசரன்
சஸ்மீரா தீராத துயர்கொண்ட சாஜீகரன்
நதிஸ்கர் தனையிங்கே நீபிரிந்து சென்றதுஏன்?
இரண்டாயிரத்து இரண்டிலே இறைபதம் அடைவேனென்று
திரண்டிருந்த உறவெமக்குச் சேதிதான் சொன்னாயே
பிரிந்தனையே ஐயய்யோ பிதற்றுகிறோம் நாமுமிங்கே
நிரந்தரமாய்ச் சென்றனயோ நமனின் இருப்பிடத்தே!

திரு. நடராசா சண்முகராஜா
மருமகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர் உயர்திரு செல்லையா கந்தையா உபாத்தியாயர் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு

**ஊர்ச்சிறப்பு:-**

மருத நிலமான சுதுலை [சுது+மல்+ஐ] பள்ளமான இடம் எனும் கருத்துடையது. சுதுமலை அம்மன் கோயிலும் அதன் அமைவிடமும் வயலும் வயல்சார்ந்த பகுதியுமாகும். இரண்டு குளங்களும், ஒரு கேணியும், பல கிணறுகளும், பரந்து காணப்படும் வயல் வெளிகளும் மருத மரங்களும் நிறைந்த இயற்கைச் சூழல். ஊரெங்கும் மாமரங்களும் பலாமரங்களும் தென்னை, பனந்தோப்புகளும் வாழைத்தோட்டங்களுமாக நிறைந்திருக்கும் குளிர்மையும் நிழலும் சேர்ந்த சீதோஷண நிலைமை.

ஊரின் வடக்கில் ஈஞ்சடி ஞானவைரவர் கோவிலும் அரசடி விநாயகரும் தெற்கில் எச்சாட்டி வைரவரும் மேற்கில் சுதுமலை அம்மனுமாக கோவில்களால் நிறைந்த ஊர். மானிப்பாய் மருதடி விநாயகர் ஊரவர்களின் இதய தெய்வம்.

**கல்வி:-**

செல்லையா செல்லாச்சி தம்பதிகளின் மூத்த ஆண்மகனாய் 29.08.1920 இல் அவிட்ட நட்சத்திரத்தில் இவ்வுலகில் பிறந்தார். அமரர் கந்தையா தனது கல்வியை சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலையில், உடுப்பிட்டி முருகேசு பண்டிதர்வழிகாட்டலில் பயின்று சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தைப் பெற்றார். 1943 இல் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தமிழ் ஆசிரியர் தராதரப் பத்திரத் தினைப் பெற்றார்.

**தொழில்:-**

தொடர்ந்து விவசாயத் தொழிலிலும் சுருட்டுத் தொழிலிலும் கூட்டுறவுச்சங்க முகாமையாளராக வியாபாரத்திலும் வழக்கறிஞர்களின் எழுதுவினைஞராகவும் ஈடுபட்டார். கல்வியில் பெருநாட்டம் கொண்டு இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தனது ஆசிரிய சேவையினை ஆரம்பித்தார். 1947 இல் ஊவா மாகாணத்திலுள்ள நாறன்கொல [இரண்டாவது பிரிவு] தமிழ் கலவன் பாடசாலையில் உதவி ஆசிரியராகப் பணியேற்றார். 1949 இல் அரசினர் ஆசிரியராக நியமனம் பெற்று [01-09-1949 அனுராதபுரத்திலுள்ள அ/முகிறியாவ அ.த.க. பாடசாலையில் பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேற்றார். 01.01.1950 முதல் அதேமாவட்டத்தில் அ/றாகம அ.த.க. பாடசாலைக்கு மாற்றம் பெற்றார். 1953 இல் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அனுமதிபெற்று1954 இல் பயிற்றப் பட்ட முதலாந்தர தமிழ் ஆசிரியராக வெளியேறினார். 01.01.1955 முதல் நு/றாகல அ.த.க. பாடசாலையிலும் 01.01.1962 முதல் யா/போக்கட்டி அ.த.க. பாடசாலை யிலும் 01.01.1963 முதல் யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை யிலும்01.01.1965 முதல் யா/சுதுமலை சிந்மய பாரதிவித்தியாலயத்திலும் 01.03.1971 முதல் சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலையிலும் உதவி ஆசிரியராகக் கடமையாற்றினார்.

01.08.1971 முதல் யா/சுதுமலை அ.த.க. பாடசலையில் அதிபராக நியமனம் பெற்று 28.08.1978 வரை சேவையாற்றினார். அதிபராய் இருந்த காலகட்டத்தில் அப்பாடசாலையைத் தரமுயர்த்தியதுடன் அதற்கு வேண்டிய கிணறு, சுற்றுமதில், விளையாட்டிடம் என்பவற்றை ஊர்மக்களின் உதவி கொண்டு அமைத்து பாடசலையை வளர்த்தார்.

**தமிழ் கல்வியில் நாட்டம்:-**

தமிழ்க் கல்வி மீது கொண்ட ஆர்வம் காரணமாக திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் பயின்று ஆரியா பாஷா விருத்திச்சங்க 'பிரவேச பரீட்சையில் யோக்கியதா பத்திரம்' பெற்று திறமைச் சித்தி யடைந்தார். 1970 இல் ஆசிரிய ஆலோசகர் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டு கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தார்

**தொழிற்சங்க பணிகள்:-**

ஆசிரியர் தொழிற்சங்கங்களில் உறுப்பினராக இருந்து சேவை யாற்றினார். 1965இல் அகில இலங்கை அரசினர்பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்க வலி.மேற்கு கிளையின் செயலாளராயும் 1975 இல் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்உடுவில் வட்டாரக் கிளையின் தலைவராகவும் கடமையாற்றினார்.

**சமய இலக்கியப் பணி:-**

இளமைக்காலம் முதலே புராண இதிகாசங்களில் ஈடுபாடும் திருமுறை ஓதுதலில் தம்மை ஈடுபடுத்தியும் சிறார்களுக்கு வித்தியாரம்பம் செய்தும் வந்தமை குறிப்பிடத்தக்கது. சுதுமலை அம்மன் கோவில் முன்னாள் குருக்கள்சிவஸ்ரீ.தி. பொன்னுச்சாமி குருக்களின் [பொன்னையா] நெறிமுறைகளிலும் வழிகாட்டலிலும் புராண படனம் ஓதவும் பொருள் கூறவும் பழகிக் கொண்டார். கந்தபுராணம், பெரியபுராணம், திருவாதவூரடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணம், பிள்ளையார் கதை என்பவற்றுக்கு பயன் சமய சொல்லும் பணியை சுதுமலை அம்மன் கோவில், மானிப்பாய் மருதடி, விநாயகர், இணுவில் பரராஜ சேகரப்பிள்ளையார் கோவில், இணுவில் கந்தசுவாமி கோவில், தாவடிப் பிள்ளையார் கோவில் முதலானவற்றில் ஆற்றிவந்தார்.

கோவில் பணிகள்:-


1949 இல் இந்திய தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டு பெற்ற அனுபவத்தினால் தனது ஊர்க்கோயில்களை விருத்தியாக்க முயன்று, சுதுமலை இந்து சமய விருத்திச் சங்கத்திலும் சுதுமலை அம்மன் கோவில் நிர்வாக சபையிலும் மானிப்பாய் மருதடிவிநாயகர் கோவில் வழிபடுவோர் சங்கத்தின் அங்கத்தவராகவும் கடமையாற்றினார். சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர் ஆலய திருப்பணிச் சபைத் தலைவராக 1977 இல் பணியேற்று கோவிலின் கும்பாபிசேகத்தை முன்னின்று நடத்தி வைத்தார். ஓய்வுகாலங்களில் பாடசாலைகளிலும் கோவில்களிலும் சமய சொற்பொழிவுகளையும் திருமுறை ஓதுதலையும் மேற்கொண்டார்.

இல் வாழ்வு:-

அமரர் கந்தையா 1958 இல் சங்கரப்பிள்ளை செல்லம் தம்பதிகளின் நான்காவது மகளாகிய தங்கம்மாவைக் கரம்பிடித்து ஐந்து புத்திரிகளையும் நான்கு புதல்வர்களையும் பெற்று இல்வாழ்வில் சிறந்து ஊருக்கும் உலகுக்கும் உதவி உதாரண புருஷராய்த் திகழ்ந்து, தனது எண்பத்து இரண்டாவது வயதில் 20.01.2002 இல் இறைவனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சத் தொடர்

மை சங்கரப்பிள்ளை+செல்லம்

ப்பா சுப்பையா

பரஞ்சோதி சின்னராசா

ணம் மீனாம்பாள் தங்கம்மா (தங்கேஸ்வரி) கயிலாயநாதன் சிதம்பரேஸ்வரி மகேஸ்வரி

வேள் சிவனேஸ்வரி ஸ்ரீநந்தகோபன் அகிலாண்டேஸ்வரி ஸ்ரீகருணாகரன்

ட்சுமி சிவனேஸ்வரி + சிவகுமார்

↓

சஜீந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவராய்



ஆசிரியராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

2002.01.20ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை எமது தந்தையார் இவ்வுலகு நீத்தார் என்பதறிந்து உடனே எம் இல்லம் ஏகி எம் துயர் ஆற்றிய உள்ளங்களுக்கும்—

தந்தையாரின் சுக நலனில் அக்கறையோடு மருத்துவ உதவி புரிந்தவர் அமரர் Dr. அருமைத்துரை அவர்களுக்கும்—

இறுதிச் சடங்கிலன்றும் அதன் பின்பும் சோதரராய் சேர்ந்திருந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும் மற்றும் பிரசுரம் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும்—

பத்திரிகை, தந்தி, தபால், தொலைபேசி மற்றும் பிரசுரம் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும்—

மலர்வளையம் சாத்தி மரியாதை தெரிவித்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சாரணர்கள்களுக்கும்—

திருமுறைபாடித் தெய்வீகம் கமழச் செய்தவர்களுக்கும்—


எமது தந்தையாரின் நினைவாக வெளியிட தனது நாடகப் பிரதியை தந்துதவிய அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களுக்கும்—

இம்மலரில் எம் தந்தையார் பற்றிய நினைவுகளைப் பதிவு செய்தவர்களுக்கும்—

இம்மலரின் வெளியீட்டிற்கு ஒத்தாசை புரிந்தவர்களுக்கும்—

இம்மலரினை அழகுற அச்சேற்றித் தந்த 'பத்மாஸ்' கனணி அச்சகத்தினர்க்கும்—

நன்றியுடையோம்.



"கந்த மாதனம்",
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
19.02.2002

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II

# இணைப்பிதழ்

# "நீ செய்தி நாடகமே"

# நாடகம்

எழுதியவர்:
**குழந்தை ம. சண்முகலிங்கம்**
'தாயகம்'
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாடகம் செய்தவர்:**

1ஆம் குடும்பம்:

| | | | |
|---|---|---|---|
| 1. கனகசபை | – | பாட்டன் | 80 வயது |
| 2. கமலம் | – | பாட்டி | 73 வயது |
| 3. சதாசிவம் | – | அம்மப்பா | 75 வயது |
| 4. சரஸ்வதி | – | அம்மம்மா | 68 வயது |
| 5. கதிர்காமநாதன் | – | தந்தை | 50 வயது |
| 6. காயத்திரி | – | தாய் | 45 வயது |
| 7. கவிதா | – | மகள் | 23 வயது |
| 8. கபிலன் | – | மகன் | 18 வயது |

2ஆம் குடும்பம்:

| | | | |
|---|---|---|---|
| 1. மரகதம் | – | அப்பம்மா | 70 வயது |
| 2. மகாலட்சுமி | – | தாய் | 45 வயது |
| 3. மல்லிகா | – | மகள் | 23 வயது |

3ஆம் குடும்பம்:

| | | | |
|---|---|---|---|
| 1. பராசக்தி | – | மம்மி | 70 வயது |
| 2. சங்கரன் | – | அறையில் இருப்பவன் | 24 வயது |
| 3. ராஜன் | – | அறையில் இருப்பவன் | 24 வயது |

முதியோர் இல்லத்தவர்:

| | |
|---|---|
| 1. அழகானந்தம் | 68 வயது |
| 2. வைத்திலிங்கம் | 78 வயது |
| 3. இரத்தினம் | 65 வயது |
| 4. சுப்பிரமணியம் | 70 வயது |
| 5. விசாலாட்சி | 65 வயது |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேடையின் முன்திரை மூடிக்கிடக்கையில் சங்கரன் முன்மேடைக்கு வந்து பேசுகிறான்**

***சங்கரன் :*** "அன்பே சிவம்" என்பார்கள்
'சிவம்' என்றதும், என் நினைப்பில்
என் பாட்டி முன் வந்து நிற்பாள்.
அந்த நினைப்பால்
சோகம், சோர்வு விளைவதில்லை.
மாறாக,
என் எண்ணத் தொடுவானில்
புன்முறுவல் சோதி
மெல்ல உதிக்கும்.
நெஞ்சம்,
இறந்த காலத்துள் முத்துக்குளிக்கும்......
அங்கு, என்பாட்டி
என்னைக்கட்டி அணைத்து
முத்தமிடுவாள்
அவளது
மல்லிகைப்பூ நரையும்
செவ்வந்தி முகமும்
என், கண்ணுக்குத் தெரியும்.
சார்மனைக் கதிரை
அவள் சிம்மாசனம்
சரஸ்வதி அதில் வீற்றிருப்பாள்
சங்கத்தமிழ் அதில் கொலுவிருக்கும்.
எனினும், பேசும் புலவன் நான்
அவள் செவிசாய்த்திருப்பாள்
என்பாட்டி
எப்பொழுதுமே என் பக்கம்தான்.
என் நீண்ட கனவுகளை
அவள் கேட்டிருப்பாள்
"சங்கரா! நீ நல்லாய் இருப்பாய்!"
என்றவள், அடிக்கடி சொல்வாள்
அதில் சத்தியம் சிலிர்க்கும்.
அவள்,
நீண்டு நெடிதாய்க் கடந்து கிடந்த
எண்பது ஆண்டின் வரலாற்றை
அடிக்கடி ஓதுவதில்லை.
ஆயினும், அவள் கண்கள்
அமைதியான, கிராமத்து வாழ்வைக் காட்டி நிற்கும்.
என் பாட்டனோடு வாழ்ந்த
நாற்பத்தைந்து ஆண்டுகள் தெரியும்.
பதினொரு பிள்ளைகள் பெற்றதும் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தந்தையும் அவர் பின்னவரும்
நடக்க, கதைக்க, தம்வழிபோக
அவள் கற்றுத் தந்ததும் தெரியும்
பாவம்! அந்திமத்தில் அவளை வாட்டிய
'இழுப்பும்' தெரியும்
அன்றொருநாள், அவள்
ஊர்கூடி நிற்கையில், தனியவளாய் நின்று
என் பாட்டனைச்
சாவார் சுமந்து செல்வதைப்
பார்த்திருந்ததும் தெரியும்.
ஓராண்டுத்துடக்கு அவள் காத்தாள்,
அதை அடுத்து, ஆலயம் சென்ற நான்
திருநீறைக் கொணர்ந்து
அவள் நெற்றியில் பூசினேன்.
"முருகா!" என்றாள்.
என்னைப் பார்த்து முறுவலித்தாள்.
அடுத்தநாள் வழமைபோல்
கையில் தேவாரத் தொகுதியோடு
தன் சிம்மாசனத்தில் அமர்ந்தாள்.
"சொல்லு நா நமச்சிவாயவே"
எனும்வரை ஓதினாள்,
ஆயிரம் பிறைசூடியின் பொற்பதம் சூடினாள்.
சிம்மாசனம் சமாதியாயிற்று
என் மனம் சூனியமானது.

சங்கரன் சொல்லி முடித்து வெளியேறும் வேளையில் புலரும் நாளைப் புலப்படுத்தும் பாங்கில் பூபாளம் இசைக்கப்படுகிறது. கடிகாரமொன்று அழகாக ஆறு தடவைகள் ஒலித்து நேரத்தைக் கூறி விட்டு ஓய்கிறது. அந்த ஒலியுடன் முன் திரையும் விலகிக் கொள்கிறது. மேடையில் மூன்று வீடுகளின் இருக்கை அறைகள் தெரிகின்றன. முன் மேடையில் அரைவட்ட வடிவில், வலது இடதாக, உயரம் குறைந்த ஐந்து குற்றிகள் உள்ளன. இவை வேலித்தூண்கள் போலவும் தோன்றும். இருக்கையாகவும் பயன் படும். அவற்றில், ஒவ்வொரு கைத்தடி செங்குத்தாகச் செருகப்பட்டிருக்கும். மேடையின் பின் மத்திய பகுதியில் கனகசபை - கமலம் - கதிர்காமநாதன் - காயத்திரி - கவிதா, கபிலன்/சதாசிவம் - சரஸ்வதி ஆகியோரை உறுப்பினராகக் கொண்ட குடும்பம் உள்ளது. வலது முன் புறத்தில் மரகதம் - மகாலக்சுமி - மல்லிகா ஆகியோரது வீடு இருக்கிறது. முன் இடது புறத்தில் பராசக்தியின் வீடு உண்டு. அதில் சங்கரன், ராஜன் ஆகியோர் அறையொன்றில் வாடகைக்குக் குடியிருக்கின்றனர். முன்திரைக்கு வெளியே வலது கோடியிலும் இடது கோடியிலும் உள்ள குற்றிகளில், வலது குற்றியில் விசாலாட்சியும், இடதுகுற்றியில் அழகானந்தரும் அமர்ந்திருக்கின்றனர். வழமை போல் உலாவச் சென்ற கனகசபை - கமலம் தம்பதியினர், ஆறுமணி அடிக்கும் போது இடது முன் மேடையால் பிரவேசிப்பர். வீடுகளிலும் ஏனைய குற்றிகளிலும் உரியவர் உரிய முறையில் அமர்ந்திருப்பர். மணி அடிக்கும் வேளையில் பின்வரும் பாடலும் பாடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடல்:**

தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாம் ஆர் எமது ஆர் பாசம் ஆர்
என்ன மாயம் இவை போகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன் தன் குறிப்பே குறிக்கொண்டு
போம் ஆறு அமைமின் பொய் நீங்கிப்
புயங்கன் ஆள்வான் பொன் அடிக்கே.

*- திருவாசகம் - யாத்திரைப் பத்து - 3 -*

**- பாடல் முடிவடைய கனகசபை - கமலம் இடது புறத்தால் மேடைப்படிகளில் ஏறிவருவர். இடது கோடியில் இருக்கும் அழகானந்தத்தைக் கண்டதும்**

**கனக:** *என்ன விசேஷம்? புனைகதை எழுத்தாளர் அழகானந்தத்தார் இண்டைக்கு வெள்ளனவே வீதிக்கு வந்திட்டார்?*

**அழகா:** *வாழ்க்கையே புனைகதையாய்ப் போனதும், எழுத்தாளன் வீதிக்கு வந்திட்டான். தலை எழுத்து வெற்றி கண்டிட்டுது.*

**கனக:** *சலிப்பு வேண்டாம் அழகானந்தம்!*

**விசாலா:** *கண்படக்கூடாது! கனகசபையரும் கமலக்காவும் குடுத்துவச்சனீங்கள்!*

**கமல:** *நாங்கள் குடுக்கவுமில்லை. வைக்கவுமில்லை.*

**கனக:** *வச்சுக்குடுக்கவுமில்லை, விசாலாட்சி!* **(சிரிக்கிறார்)**

**- கனகசபை - கமலம் தங்கள் வீட்டுக்குள் செல்கின்றனர். படித்துக் கொண்டிருந்த கபிலன் இவர்களைக் கண்டு விட்டு**

**கபில:** *அக்கா! ஆறுமணி ஆச்சுது!*

**கவிதா:** *பாட்டாவும் பாட்டியும் வீதி உலாப்போய் வந்தால், கேற்றடியிலை கால்வைக்க ஆறுமணி அடிக்கும்.*

**கனக:** *கவிதா! நேரம் பவித்திரமானது! கபிலன் இன்னும் அரை மணித்தியாலம் இருக்கு, படிப்பு முடிச்சுக் கதையள் கதைக்க!*

**கபில:** *எங்கடை பாட்டா "டைம்கீப்பரா" இருந்தவரோ?!*

**கனக:** *மனிசனாய்ப் பிறந்தவன் எதிலும் 'டைம்கீப்' பண்ணவேணும்!*

**கவிதா:** *அப்பிடி எண்டா?*

**கனக:** *காலம் கணிச்சு வாழவேணும்! காலத்தை அறிஞ்சும் வாழவேணும்! அதுமுடியாத போது தானே காலமாகி விடவேணும்!*

**-கனகசபை சிரித்துக்கொண்டு அமர்கிறார். காயத்திரி மூவருக்கும் தேநீர் பரிமாறுகிறார். கமலம் முன்னமே உள்ளே சென்றவர், கையில் தனது தேநீருடன் வந்து அமர்கிறார். கதிர்காமநாதனும் தேநீர் பருகியவாறு வருகிறார்.**

**கபில:** *அப்பாவும், அம்மாவும் ஏன் 'வோக்கிங்' போறதில்லை?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காயத்:** நாங்கள் 'வேக்கிங் பீப்பிள்' ஆனபடியால் தேவை இல்லை!

**கதிர்:** நான் இன்னும் பத்து வருஷத்துக்கு நடக்கத்தேவை இல்லை!

**கவிதா:** ஏனப்பா?

**கதிர்:** எனக்கு இப்ப ஐம்பது வயது. அறுவது வரை இங்க இருந்து கச்சேரிக்கு சயிக்கிள் மிதிக்கிறது போதாதா?

**கனக:** நொண்டிக்கழுதைக்குச் சறுக்கினது சாட்டு!

**கவிதா:** பாட்டா, அப்பாவை கழுதை என்றார்!

**கபில:** திருவன் வளத்த குதிரையைப் போல, அக்காதும்பெண்டு நினைச்சுத் தாடியை பிடிக்கிறா!

**கமல:** இன்னும் நாலு மாதத்திலை கவிதாவுக்கு 'கம்பஸ்' கடைசிச் சோதினை நடக்கும் அதோடை படிப்பும் முடியும்.

**கபில:** அக்காவுக்கு இனிக் கலியாணம் பேசவேணுமெண்டு பாட்டி சொல்லாமல் சொல்றா.

**கவிதா:** ஓ, இவருக்குத்தான் எல்லாம் விளங்கும்!

**காயத்:** எதையும் செய்யிற காலத்திலை செய்து முடிக்கத்தானே வேணும்.

**கதிர்:** செய்வம், இப்ப என்ன அவசரம்!

**காயத்:** இருவத்திமூண்டு வயது ஆகுது.

**கனக:** ஆகட்டும், சோதினை முடியட்டும்! என்ன காயத்திரி?

**காயத்:** ஓம் மாமா!

**கபில:** அக்கா! பாட்டாவிலை கோவமே?

-**இந்தச் சிறிய பகிடிக்கும் இக்குடும்பம் சிரித்து மகிழ்கிறது. அடுத்து இவர்கள் தத்தம் அலுவல்களில் அமைதியாக ஈடுபடுகின்றனர். உள்ளே செல்பவர் சென்று விடுவர். சதாசிவத்தை, அவர் மனைவி சரஸ்வதி கையில் பிடித்து அழைத்து வந்து ஆசனத்தில் இருத்துவார்.**

**சரஸ்:** இந்தாங்கோ! இந்த 'பில்சை' விழுங்குங்கோ

**சதாசி:** என்னது?

**சரஸ்:** முட்டுக்குளிசை!

**சதாசி:** தந்திட்டுப்போம்! நான் விழுங்கிறன்.

**சரஸ்:** விழுங்கிறனெண்டு சொல்லி, இவ்வளவு நாளும், நான் தந்திட்டு போக, மருந்தை யன்னலுக்கு வெளியாலை எறிஞ்சு போட்டு, சுடு தண்ணியை மட்டும், மடக்கு மடக்கெண்டு குடிக்கிறீங்கள்.

**சதாசி:** **(சிரிக்கிறார்)**

**சரஸ்:** சிரிக்கிறார் கள்ளன்! ஆவெண்ணுங்கோ வாயை!

-**அவர் குழந்தை போல வாயைத் திறக்க, சரஸ்வதி மருந்தை ஊட்டுகிறார். ஊட்டி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விட்டு சரஸ்வதி உள்ளே செல்கிறார்.**

*கபில:* *அம்மப்பா!*

*சதாசி:* *ஆ!*

*கபில:* *ஏன் மருந்தை குடிக்காமல், யன்னலுக்கு வெளியாலை எறிஞ்சனீங்கள்*

*சதாசி:* *எத்தினைக் கெண்டு மருந்தைக் குடிக்கிறது?*

*கவிதா:* *குடிச்சாத்தானே வருத்தம் மாறும்.*

*சதாசி:* *சாப்பாட்டுக்கு முன்னம் மருந்தைக்குடு எண்டு டொக்டர் சொல்ல, உங்கடை அம்மம்மா, சாப்பாட்டுக்குப் பதிலா மருந்தைதாறா!*

**-இதைக் கேட்டுப் பேரப்பிள்ளைகளும், கனகசபையரும் சிரிக்கின்றனர். சரஸ்வதி தேநீருடன் வந்து, சதாசிவத்திடம் கொடுக்கிறார்.**

*சரஸ்:* *இந்தாங்கோ!*

*சதாசி:* *என்னது?*

*சரஸ்:* *பால் தேத்தண்ணி!*

*சதாசி:* **(ஒரு வாய் குடித்து விட்டு)** *தேத்தண்ணி எண்டீர்! கஷாயமல்லே.*

*சரஸ்:* *இனிப்பு எண்னெண்டு போடுறது? சலரோகக்காரனுக்கு!*

*சதாசி:* *எல்லா வருத்தமும் என்னைக் குத்தகைக் கெடுத்திருக்கு!*

*கபில:* *அம்மப்பா பேக்காய்! பகிடி விடுறதில!*

*சதாசி:* *பின்னைஎன்ன! இழுப்பு, தொய்வு, முட்டுவாதம், பித்தம்கிலேற்பனம், பிறெஷர், ஹாட் வருத்தம், சலரோகம், சொறி, சிரங்கெண்டு நான் ஒரு சர்வரோக சாம்ராச்சியம்! ...... உங்கடை அம்மம்மா, சர்வரோக நிவாரணி! மருந்துக்கடை! டிஸ்பென்சரி!*

*சரஸ்:* **(கனகசபையை விழித்து)** *அண்ணை! இவர் உங்களிலும் பாக்கப் பத்து வயதுக்கு இளையவர்! ஆனால், ஆரும் முன்னூறு வயது மதிப்பினம்.*

**-இதைக் கேட்டு சதாசிவம் உட்பட அனைவரும் சிரிப்பர்.**

**இக்குடும்பம் தமது வேலையில் அமைதியாக ஈடுபட்டிருக்கும் வேளையில், மகாலட்சுமி குடும்பத்தில் இயக்கம் குவியும்.**

**நாடக ஆரம்பம் முதல் மரகதம் அங்கு உள்ள ஒரு நல்ல ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். இப்பொழுது மகாலட்சுமி வந்து.**

*மகால:* **(கோபத்தோடு)** *மாமி! உதிலை ஏன் இருக்கிறீங்கள்?!*

*மரக:* *ஆ! இருக்கச் சுகமா இருக்குது பிள்ளை.*

*மல்லிகா:* **(வந்து கொண்டு) (அதட்டலா)** *அப்பம்மா!! உங்களுக்கு எத்தினை தரம் சொல்றது?!*

*மரக:* *ஆ! என்ன மோனே?*

*மல்லி:* *என்னவோ?! ஹோலுக்கை வந்து இருக்காதேங்கோ, ஆக்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறநேரம் எண்டு எத்தினை தரம் சொல்றது?!

**மரக:** இருக்கச் சுகமா இருக்கு.

**மல்லி:** பின்னுக்கு உங்களுக்கெண்டு கதிரை போட்டிருக்கல்லே!

**மரக:** அதிலை நெடுக இருக்க அண்டுது.

**மகால:** அண்டுதோ? கூழுக்கழுகிறதுக்குக் குஷன் தேவைப்படுகுதோ?

-**இவ்வேளை மல்லிகாவின் பல்கலைக்கழக சகபாடி சங்கரன் அங்கு வருகிறான்.**

**மகால:** **(மல்லிகாவை எச்சரிக்கை செய்யும் தொனியில்)** மல்லிகா! **(பின் சாதாரணமாக)** சங்கரன் வாறார்!

**மல்லி:** **(சற்றுத் திகைத்து)** ஆ!! **(பின் சுதாகரித்து)** அ.. வாங்கோ சங்கர்! அம்மா!!

**("அம்மா!" என்பதில் தொனித்த பொருளைப்புரிந்து கொண்ட மகாலட்சுமி)**

**மகால:** **(அன்புதொனிக்க)** மாமி.. வாங்கோ!.. உங்களுக்கு குளிக்க சுடு தண்ணி வச்சிருக்கு, கெதியா! ஆறப்போகுது.

**மரக:** சுடு தண்ணியோ?! எனக்கோ?!

**மல்லி:** ஓம் அப்பம்மா!

**மரக:** நான் குளிக்கவோ?!

**மல்லி:** அச்சாப்பிள்ளையல்லே! போய்க்குளியுங்கோ!

**மகால:** நேரத்துக்குச் சாப்பிட வேணுமல்லே மாமி! வாங்கோ!

- **மகாலட்சுமி மாமியாரைக் கையில் பிடித்து அழைத்துச் செல்கிறார். கைப்பிடி கடுமையாக இருப்பதை மரகதம் மட்டும் அறிவாள். மகாலட்சுமியும் அறிவாள். மல்லிகாவுக்கும் தெரியும். புத்திசாலியான சங்கரன் அறியாமலா இருக்கபோகிறான்.**

**சங்கர:** பாட்டி உயிரோடை இருக்க நீங்கள் குடுத்து வச்சிருக்க வேணும்!

**மல்லி:** பாட்டி இல்லை அப்பம்மா!

**சங்கர:** நான் பாட்டி எண்டுதான் கூப்பிட்டனான்.

**மல்லி:** இப்ப உங்கடை பாட்டி இல்லையா?

**சங்கர:** இல்லை! அஞ்சு வருஷமாகிது.

**மல்லி:** செத்தா?

**சங்கர:** அப்பிடிச்சொல்லக்கஷ்டமா இருக்கு, ஆனால் அதுதான் உண்மை.

**மல்லி:** பாட்டி சாகேக்கை எத்தினை வயது?

**சங்கர:** எண்பது வயது. அவதான் எனக்கு எல்லாமாக இருந்தவ.

**மல்லி:** எல்லாமெண்டால்?

**சங்கர:** தாயாக, தந்தையாக, நட்பாக, மந்திரியாக...

**மல்லி:** நீங்கள் ராசாவாக இருந்தீங்களாக்கும்?!

**சங்கர:** பாட்டி இருந்தால் நான் இண்டைக்கும் ராசாதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மல்லி:* உங்களை ராசாவா வச்சிருக்க எத்தினை பேர் இருப்பினம்!

*சங்கர:* ஆர் இருந்தென்ன? பாட்டி இல்லையே!

*மல்லி:* நீங்கள் ஒரு பாட்டிப் பயித்தியம்! எனக்கும் எங்கடை அப்பம்மாவில்லை நல்ல விருப்பம் அவ செத்தா, ஐயோ! நான் சரியா அழுவன்.

- மகாலட்சுமி தேநீருடன் வந்து சங்கரனிடம் கொடுத்து

*மகால:* சங்கரன்! எடுங்கோ! சுடச்சுடக்குடியுங்கோ!

*சங்கர:* கொஞ்சம் ஆறட்டும் 'அன்டி'!

*மல்லி:* எனக்கும் இளஞ்சூடுதான் குடிக்கப்பிடிக்கும்... பேச்சுத்தமிழ்மை நல்ல சொல்லுகள் இருக்கு என்ன சங்கர்?!

*சங்கர:* எதைச் சொல்றீர்?

*மல்லி:* 'இளஞ்சூடு'!

*மகால:* சங்கரன்! நீங்கள் ஏன் வீணா றூமுக்கு வாடைகுடுத்து 'மம்மி' வீட்டிலை இருக்கிறீங்கள்? இங்க ரெண்டு றூம் சும்மா இருக்கு. ஒண்டாப் படிக்கிறனீங்கள் சேந்து படிக்கலாமே!

*சங்கர:* அங்கை நானும் ராஜனும் சேந்து படிக்கிறனாங்கள். மல்லிகா! ஏன் வரச் சொன்னனீங்கள்?

*மல்லி:* "டவுட்ஸ்" கொஞ்சம் இருக்கு, கேட்டுப்படிக்க.

*சங்கர:* நான் இப்ப கம்பசுக்குப் போக வேணும்.

*மல்லி:* இண்டைக்கேன் அங்கை?

*சங்கர:* எங்கட ஊர் 'போய்' ஒருத்தனை வரச்சொன்னான், ஊருக்கு லெட்டர் குடுத்து விடவேணும்.

*மல்லி:* பிறகு எப்ப நேரம் உங்களுக்கு?

*சங்கர:* ஏழரைக்கு, வயோதிபர் இல்லத்துப் போறம்.

*மல்லி:* இண்டைக்கா போறீங்கள்?! பாத்தீங்களா, எனக்குச் சொல்ல இல்லைத்தானே? ஆரார் போறீங்கள்?

*சங்கர:* நான், ராஜன், கவிதா.

*மல்லி:* நானும் வாறன்!

*சங்கர:* அப்பிடியா?

*மல்லி:* ஓம்!

*மகால:* ரெண்டு பேருமா சாப்பிட்டிட்டுப் போங்கோ!

*சங்கர:* எனக்கு வேண்டாம் 'அன்டி'! மல்லிகா சாப்பிட்டிட்டு ஏழரைக்கு கம்பசுக்கு வாங்கோ நான் போறன்.

**-சங்கரன் வெளியேறுகிறான். மகாலட்சுமியும் மல்லிகாவும் உள்ளே செல்கின்றனர். செல்கையில்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மல்லி:* அம்மா சுறுக்கா சாப்பாட்டைத்தாங்கோ!

*மகாலே:* வெளிக்கிட்டுக்கொண்டு வாங்கோ, போடுறன்.

**-முன் இடது புறக்குற்றியில் இதுவரை குந்தி இருந்த அழகானந்தம் தூரப் பார்த்து-**

*அழகா:* பல்கலைக் கழகத்திலை படிக்கிற பிள்ளையள் இண்டைக்கு வருங்கள் எண்டவை, இன்னும் வரக்காணன்!

*விசாலா:* ஆர்வராட்டிலும், என்ரமகனவை, வெளிநாட்டிலைஇருந்துவந்தால், கட்டாயம் என்னட்டை வருவினம்! அவங்கள் காயிதம் போட இல்லை எண்டாலும் என்னைக் கைவிடாங்கள்!

**-அழகானந்தம் எழுந்து உள்ளே விரக்தியோடு சென்றுவிடுகிறார். அவரது இடத்தில் வைத்திலிங்கம் வந்து அமர்ந்து கொள்கிறார். இவ்வேளை பராசக்தி வீட்டில்-**

*ராஜு:* ஆச்சி! நான் போயிட்டு வாறன்!

*பரா:* ஆரது?.. ஆ.. புதுக்க வந்த தம்பியே? உம்மடை பேர் .. ஆ! என்ன?

*ராஜு:* ஓம் ஆச்சி!

*பரா:* ஒண்டும் கேக்க இல்லை! **(வலது காதைத் திருப்பிக் காட்டி)** இந்த பக்கத்தாலை சொல்லும்!

*ராஜு:* நான் போயிட்டு வாறன் ஆச்சி!

*பரா:* ஆச்சியோ?! ஆரை ஆச்சி எண்டநீர்?!

*ராஜு:* உங்களைத்தான் ஆச்சி!

*பரா:* என்னை அப்பிடிச் சொல்லக்கூடா!

*ராஜு:* ஏன் ஆச்சி?

*பரா:* பிறகும் பாரும்! என்னை மம்மி எண்டுதான் சொல்லவேணும்

*ராஜு:* மம்மி எண்டோ?

*பரா:* ஓம்! மம்மி எண்டுதான் எல்லாரும் என்னைக் கூப்பிடுறது.

*ராஜு:* "ஆச்சி" நல்ல சொல்லுத்தானே?

*பரா:* சீ! அது படிக்காத ஆக்கள் பாவிக்கிற சொல்லு!

*ராஜு:* அது நல்ல தமிழ்ச் சொல்லுத்தானே?

*பரா:* தமிழ்ச் சொல்லு எண்டதாலை, கண்ட கண்ட ஆக்களெல்லாம் பாவிக்கிற சொல்லை, படிச்ச நாங்களும் பேசிறதா?

*ராஜு:* கண்ட கண்ட ஆக்களெண்டா?

*பரா:* இந்தப் பொடியனுக்கு ஒண்டும் விளங்காது **(அங்கு மிங்கும் பார்த்து விட்டு)** சாதி குறைஞ்ச ஆக்கள் தான் அந்தச் சொல்லுச் சொல்றவை!

*ராஜு:* எந்தச் சொல்லு?

*பரா:* என்ர வாயாலை அதைச் சொல்ல மாட்டன்.

*ராஜு:* ஏன்? 'ஆச்சி' எண்ட சொல்லுத் தூஷணமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறா: சீக்! பாரும் நீர் பாவிக்கிற செல்லுகளை! நீர் நல்ல குடும்பத்துப் பிள்ளை எண்டு சங்கர் 'றெக்கமெண்ட்' பண்ணினதாலை தான் நான் உமக்கு றூம் தந்தனான்!

ராஜூ: சரி, நான் போயிட்டு வாறன், அ .. "மம்மி"

பறா: ஆ! அப்பிடி மம்மி எண்டு வடிவாக் கூப்பிடும். என்ர ரெண்டு காதும் குளிரக் கூப்பிடும்!

ராஜூ: எப்பிடிச் சொன்னாலும் உங்களுக்கு ஒரு காதுதானே குளிரும்

பறா: ஓ, காது குளிரும்! என்ர பிள்ளையள் என்னை மம்மி எண்டு தான் சொல்றவை! பிள்ளையளின்ர பிள்ளையளும் மம்மி எண்டு தான் கூப்பிடுறது! ஊர் ஆக்களும் மம்மி எண்டு தான் சொல்றவை! மம்மி வீடெண்டாத்தான் ஆருக்கும் தெரியும்!

ராஜூ: உங்கடை வீட்டையோ?

பறா: பிள்ளையள், பிள்ளையளின்ர பிள்ளையள் எல்லாரும் அமெரிக்காவிலை இருந்து காயிதம் எழுதேக்க, மம்மி எண்டுதான் இப்பவும் எழுதறவை!

ராஜூ: விலாசத்திலையுமோ?

பறா: அதிலை, மிசிஸ் தேவநாயகம் எண்டுதான் போடுறவை! என்ர 'ஹஸ்பன்ட்' மிஸ்டர் தேவநாயகம் தானே!

ராஜூ: மிஸ்டர் தேவநாயகம் உங்களை எப்பிடிக் கூப்பிடுறவர்?

பறா: மம்மி எண்டுதான்! நான், அ.. அவரை பப்பா எண்டுதான் கூப்பிடுறனான்! பிள்ளையள், பிள்ளையளின் பிள்ளையள், ஊர் ஆக்கள் எல்லாரும் அவரை பப்பா எண்டுதான் கூப்பிறவை! பப்பா செத்து பத்து வருஷம்! அவர் இருந்தா எனக்கு எவ்வளவு உதவியா இருப்பார். மரிபண்ணினா ரெண்டு பேரும் நெடுக இருக்க வேணும்! ஒருத்தரைவிட்டிட்டு மற்றவர் இப்பிடிப் போயிடக்கூடா!

ராஜூ: நீங்கள் பிள்ளையளோடை அமெரிக்காவிலை போய் இருக்கலாமே?

பறா: ஆ! இந்த வீட்டை, இந்த சாமான்களை எப்பிடி விட்டிட்டுப் போக ஏலும்?

ராஜூ: ஏன் விட்டிட்டுப் போனால் என்ன?

பறா: என்னவோ? உமக்கென்ன தெரியும்? இந்த வீடு, பப்பா எனக்கெண்டு ஆசையாக கட்டினவீடு! இந்த சாமான்களெல்லாம் எனக்கெண்டே வேண்டினவர் பப்பா! இதுகளை நான் விட்டிட்டுப் போனால் எனக்குப் பாவமல்லா கிடைக்கும்! பப்பாவை ஏமாத்தினா நரகத்துக்கல்லா போவன்!

ராஜூ: மம்மி! நீங்கள் பப்பாவை காதலிச்சா கலியாணம் செய்தனீங்கள்

பறா: இல்லை, லவ் மரீஜ் தான் எங்கடை!

ராஜூ: ஆ!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரா: பப்பா கிறிஸ்டியன், நான் ஹிண்டு, ஆனால் சொந்தம். என்ற (F)பெஸ்ட் கசின்தான் அவர். பத்து வருஷம் பப்பா என்னை லவ் பண்ணினவர்!

ராஜ: பப்பாவுக்கு உங்களைலவ் பண்ண பத்து வருஷம் எடுத்துதா? இதை விட்டிட்டு அவர் 'ஜப்னா' கம்பசில மெடிசின் செய்திருக்கலாம்!

பரா: ஓ, பத்து வருஷமா லவ் பண்ணினவர்!

ராஜ: பிறகு?

பரா: பிறகென்ன! மரிபண்ணினனாங்கள்! முப்பத்தஞ்சு வருஷம், ஒருத்தரை ஒருத்தர் ஒருநாள்கூடப் பிரியாமல் இருந்தம்! பப்பா எனக்கு எவ்வளவு உதவியா இருந்தார் நான் எப்பவும் வெளிக்கிட்டு வடிவா இருக்க வேணும் அவருக்கு! பிள்ளையள் ரெண்டு பேரும் பிறந்தாப்பிறகுதான் நான் அவரை பப்பா எண்டு கூப்பிடத்துவங்கினன். அவர் மம்மி எண்டு கூப்பிட்டார்! வாய் நிறைய மம்மி எண்டு கூப்பிடுவார்! இப்பவும் பப்பா கூப்பிடுறது எனக்குக் கேக்கும். அதாலைதான் நான் எப்பவும் வெளிக்கிட்டு வடிவா இருக்கிறது!

ராஜ: மம்மி!

பரா: ஆ!!

ராஜ: நீங்கள் பப்பாவை விரும்பத்துவங்கேக்கை உங்களுக்கு எத்தினை வயது?

பரா: நீர் சரியான கள்ளன்!.!

ராஜ: ஏன் மம்மி?!

பரா: எல்லாத்தையும் கேக்கிறீர்!

ராஜ: உங்களுக்கு வெக்கமா இருந்தா விடுங்கோ மம்மி!

பரா: பப்பா தான், கள்ளன், முதல்லை லவ் பண்ணத் துவங்கினவர்!

ராஜ: உங்களுக்கு முதல்லை விருப்பம் இருக்க இல்லையா?

பரா: நான் பொம்பிளைப்பிள்ளை அல்லா! தொடக்கத்திலை எனக்கு பதினைஞ்சுவயதுதானே!

ராஜ: பதினைஞ்சிலையே துவங்கீட்டீங்கள் காய்போட!

பரா: காய் இல்லை! பப்பா காய் போடமாட்டார்! நல்ல, பழுத்த மாம்பழங்கள் பப்பா புடிங்கித்தாறவர் எனக்கு, அப்ப எங்கடை வளவிலை நிறைய மாமரங்கள்! நல்ல இனிப்பு!.. இப்ப மாமரங்கள் கூடா! அந்த மரங்கள் தான் நல்லது!

ராஜ: ஓ, பப்பா ஏறி இறங்கின மரங்களல்லே!

பரா: அதிலை ஒரு மரம் இப்பவும் இருக்கு! நான் இப்பவும் அங்க போனா, அந்த மரத்துக்குக் கீழை, கனநேரம் இருக்கிறனான், அந்த மரத்தின்ர நிழல் நல்ல சுகமா, குளிர்மையா இருக்கும். ஏனோ தெரியா, மற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்கள் அப்பிடி இல்லை. எனக்கும் பப்பாவுக்கும் மூண்டுவயது தான் வித்தியாசம்!

*ராஜ:* எனக்கு இருபத்தி நாலாகியும் ஒண்டும் இன்னம் அருளுதில்லை!

*பரா:* எனக்கு இருபத்தஞ்சு, பப்பாவுக்கு இருபத்தெட்டு, நாங்கள் மரிபண்ணேக்க.

*ராஜ:* எங்க மம்மி, கலியாணம் நடந்தது?

*பரா:* முதல்லை 'சேச்சிலை' கைப்பிடிச்சது! பிறகு எங்கடை வீட்டிலை, ஹிண்டு வெடிங்!

*ராஜ:* 'சேச்சிலை' கைப்பிடிச்சு, வீட்டிலை கால் பிடிச்சு அம்மி மிதிச்சது! உங்களுக்கு ரெண்டு கலியாணம்!

*பரா:* ஓம்!! ரெண்டு வெடிங் (F)போட்டோசும் இருந்தது எங்கடை பழைய வீட்டிலை ஷெல் அடிச்சதாலை கூரை பிஞ்சு, வீடு நனைஞ்சு, படமெல்லாம் பழுதாப்போச்சு.

*விசாலா:* **(தன்பாட்டில்)** பதினைஞ்சு வருஷமா என்ர மனிசன் பாடாக் கிடந்திது! பாக்காத பரியாரமில்லை! கடைசிலை சன்னதியிலை கொண்டு போய் வச்சிருந்தனான் கடவுள் விட்ட வழி எண்டு! அங்க நாலு வருஷம்! கந்தனும் கண்ணைமூட, அவரும் மூடிவிட்டார்! கொண்டு போய்க் கடற்கரையிலை எரிச்சுப்போட்டு நான் அனாதையா வீட்டைவந்தன். என்ன இருந்தாலும் கஞ்சியோ கூழோ! பிச்சையோ! பருக்கையோ! புருஷன் பிள்ளையளோடை கூட இருந்து குடிக்கிறது போல வருமே! இம்..!..!

*பரா:* படத்திலை நான் நல்ல வடிவு! பப்பாவுந்தான்!

*ராஜ:* இப்பவும் நீங்கள் வடிவுதானே மம்மி!

*பரா:* எனக்கு எழுவது வயது தானே! எண்பது வயதுக்குப் பிறகும் மினிஸ்டர், பிறெசிடென்ட் எண்டு வேலை பாக்கினம், போகமனமில்லாமல்!

*ராஜ:* மம்மி! நான் போயிட்டு வாறன்.

*பரா:* எங்க ராஜன்?

*ராஜ:* வயோதிபர் இல்லத்துக்கு

*பரா:* வயோதிபர் இல்லமா?! ஆ..! ஹோம் (F)போர்த ஏஜட்! பாவம் அதுகள்! வயது போன சனங்கள்! சரியா 'ஓல்ட்' ஆக்கள் தான் அங்க இருப்பினம். அந்த வயது வரைக்கும் நான் இருக்க கூடாது எண்டுதான் ஆண்டவரைப் பிறே பண்ணிறனான்.

*ராஜ:* மம்மிக்கு எவ்வளவு வயதிருக்கு, வசதி இருக்கு! நான் வாறன் மம்மி

*பரா:* ஓம் மகன்!

**-ராஜன் வெளியேறுகிறான். அவ்வேளை கனகசபை வீட்டில் சதாசிவம், கபிலன் இருவரும் கதைக்கிறார்கள். சதாசிவம் அமர்ந்திருக்கிறார். கபிலன் எதையோ ஈகவைத்தவாறு வருகிறான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கபில:** அம்மப்பா! என்ன ஒரேயடியா கதிரையிலை இருந்திட்டீங்கள்!

**சதாசி:** என்ன மோனே? உதென்ன சாப்பிடுறா?!

**கபில:** மாம்பழம்!

**சதாசி:** **(ஆவலோடு)** மாம்பழமோ?!

**கபில:** ஓம்!

**சதாசி:** **(இரகசியப்பாங்கில்)** இஞ்ச! எனக்கும் ஒரு துண்டுதா!

**கபில:** உங்களுக்குக் கூடா அம்மப்பா!

**சதாசி:** ஆர்சொன்னது? ஒரு சின்னத்துண்டுதா! ஒண்டும் செய்யாது!

**கபில:** ஐயோ! அம்மம்மா கண்டா பேசுவா!

**சதாசி:** அவகிடந்தா! ஒரு சின்னத்துண்டு தா ராசா! குஞ்சல்லே!

**கபில:** **(ஒரு துண்டு கொடுத்தபடி)** அம்மம்மா வர முந்திக் கெதியாச் சாப்பிடுங்கோ!

**சதாசி:** அச்சாப்பிள்ளை! கொண்டா! கொண்டா!

**-அவர்ஒருகடிகடிக்க முன்னம் சரஸ்வதி கையில் மருந்துடனும் சுடு நீருடனும் வருகிறார்.**

**சரஸ்:** என்ன மாம்பழம் மணக்குது?!

**கபில:** அது நான் சாப்பிட்டனான் அம்மம்மா!

**சதாசி:** என்னை ஏன் முழுசிப்பாக்கிறீர்?! நான் சாப்பிடஇல்லை

**சரஸ்:** அப்ப ஏன் வாயைப் பொச்சடிக்கிறீங்கள்?

**சதாசி:** பேரன் சாப்பிட எனக்கு வாய் ஊறுது

**சரஸ்:** இந்த வயதிலும் எல்லாத்துக்கும் கெலி! மருந்தைத்தவிர! எங்க வலது கையை நீட்டுங்கோ!

**சதாசி:** ஏன்?!

**சரஸ்:** நீட்டுங்கோ!!

**-சதாசிவம்கையை வேட்டியில்துடைத்துவிட்டு நீட்ட, சரஸ்வதி முகர்ந்து பார்த்துவிட்டு-**

**சரஸ்:** மாம்பழம் தின்னாமலோ கையில மணக்குது! செய்யிறது எல்லாம் களவு! சொல்றது பொய்!

**சதாசி:** பேரன்என்ரகையைப்பிடிச்சுக்கதைசொன்னவன், அதுதான்மணக்குது!

**சரஸ்:** கை கிடக்கட்டும்! உங்கள் கடவா காட்டித்தருகுது!

**சதாசி:** **(தடவிப்பார்த்து, கடவாயில் சிறு துண்டு கிடக்கக்கண்டு, வேறு வழியின்றி)** சரஸ்வதி! என்னை மன்னிக்கடவாய்!

**கபில:** அம்மப்பா வேண்டாம் எண்டவர், நான் தான் ஒரு சின்னத்துண்டு திண்டு பாருங்கோ எண்டு குடுத்தனான்.

**சரஸ்:** கபிலன்! நீயும் பொய் சொல்லப்பழகாதை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சதாசி:** சரஸ்வதி! அது நான்தான், பேரனை வெருட்டி ஒண்டு வேண்டித் திண்டனான் ஆசையாக்கிடந்திது!

**சரஸ்:** ஆசை, ஆசை எண்டு சாப்பிட்டிட்டு, உத்தரிக்கிறது ஆர்? உங்களை அனுப்பிப் போட்டு நான் மூளியா முடங்கிக்கிடக்கிறன்!

**-அப்பொழுது காயத்திரி அங்கு வருகிறாள். சதாசிவம் அவளைப் பார்த்து-**

**சதாசி:** இஞ்சபார் பிள்ளை கொம்மாவை! என்னைப்பேசிறா!

**காயத்:** ஏன்?

**சரஸ்:** ஒரு மன அடக்கமில்லாத மனிசன்! இந்த வயசிலும் கண்டதெல்லாத்திலையும் ஆசை!

**சதாசி:** ஒரு சின்னத்துண்டு மாம்பழம் திண்டதுக்கு என்னை எப்பிடிப் பேசிறா பார்!

**சரஸ்:** என்னைஅனுப்பிப்போட்டுத்தின்னிறதெல்லாத்தையும்தின்னுங்கோ.

**காயத்:** ஐயா! உங்கடை நன்மைக்காத்தானே அம்மா சொல்றா!

**சதாசி:** எனக்கு ஒண்டும்தராதையுங்கோநான்சாப்பிடாமல்இருந்துசாகிறன்.

**-அவ்வேளை கனகசபை, கமலம், கவிதா ஆகியோர் உள்ளே இருந்து வருகின்றனர்-**

**கவிதா:** நான் போயிட்டு வாறன்!

**சதாசி:** ஆ!..

**கவிதா:** அம்மப்பா! நான் வயோதிபர் இல்லத்துக்குப் போறன்.

**சதாசி:** என்னையும் அங்க கூட்டிக்கொண்டு போய் விடுபிள்ளை!

**சரஸ்:** நான் மட்டுமேன் இங்க தனியே இருக்கிறன்! நானும் வாறன்.

**சதாசி:** பிறகேன் நான் அங்க போவான்?

**கனக:** என்ன மச்சான் ரெண்டு பேருக்கும் கொழுவல் வந்திட்டுதே!

**-இவ்வேளை மல்லிகா தனது வீட்டிலிருந்து வெளியே செல்கிறாள். அதனை அடுத்து மகாலட்சுமி-**

**மகால:** மாமி! வீடு கவனம்! நான் சந்தைக்குப் போட்டு வாறன்! அதுக்குப் பிறகு சாப்பிடலாம். **(ஒரு தனிக் கதிரையைக் காட்டி)** இதிலை இருங்கோ! மற்றதுகள்ளை இருக்க வேண்டாம். வீடு கவனம்! வெளிக்கிட்டு ஆரோடையும் கதைச்சுக் கொண்டு நிக்கிறதில்லை

**(மகாலட்சுமி வெளியேறுகிறார்)**

**சரஸ்:** (கணவனிடம்) வாயை ஆ வெண்ணுங்கோ!

**சதாசி:** ஏன்?

**சரஸ்:** மாம்பழம் தீத்த! மருந்து போடத்தான்!

**சதாசி:** மருந்து போட்டே என்னை மயக்க நிக்கிறா!

**சரஸ்:** கதையை விட்டிட்டு, ஆ வெண்ணுங்கோ!

**-அவர்வாயைத்திறக்க, மருந்துக்குளிசைகளைப்போட்டுவிட்டு, தண்ணீரை நீட்டியபடி-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரஸ்:** இந்தாங்கோ தண்ணி! குடியுங்கோ!

-சதாசிவம் தண்ணீரை வாங்கிப் பருகுகிறார். பேணியைக் கொடுக்கிறார்-

**சதாசி:** மருந்து வாய்க்குத் தண்ணியும் கைக்கிது!

**சரஸ்:** கபிலன்! அம்மப்பாவைப் பிடிச்சுக்கூட்டிக் கொண்டு வாரும் சாப்பிட!

**கபில:** அம்மப்பா வாங்கோ சாப்பிட!

-சரஸ்வதி உள்ளே முன்செல்ல, கபிலன் சதாசிவத்தை அழைத்துச் செல்கிறான்-

**கவிதா:** நேரமாகுது, நான் போயிட்டு வாறன்.

**கனக :** சரி, கவனமா போய் வாரும்.

-கவிதா வெளியேறுகின்றாள்-

**கமல :** காயத்திரி!

**காயத் :** என்ன மாமி?

**கமல:** இப்ப கிட்டடியிலை கவிதாவிலை ஏதாவது அவதானிச்சனீரா?

**காயத்:** இல்லையே! என்னத்தைச் சொல்றீங்கள் மாமி

**கனக :** சங்கரன் எண்ட போயைப் பற்றிச் சொல்ல வாறாபோல இருக்கு.

**கமல:** ஓம், கவிதாவுக்கு அந்த பெடியன்ல கொஞ்சம் அக்கறை இருக்கிறது போலத் தெரியுது.

**கதிர்:** சங்கரன் நல்ல பிள்ளை, ஆனால் கவிதாவுக்கு நாங்கள் இன்னும் எவ்வளவோ வடிவாச் செய்து வைக்கலாம்.

**கனக :** வடிவா எண்டா? இன்னும் நல்ல வசதிகள் உள்ள இடத்திலை எண்டதுதானே?

**கதிர்:** ஓம்.

**கனக :** அது சரி, பெற்றோர் அப்பிடி, நினைக்கிறதிலை பிழை இல்லைத் தானே?

**கமல:** ஆனால், கவிதா இப்ப இந்தப் பெடியன்ல ஆர்வம் காட்டிறாபோல இருக்கே.

**கனக :** இப்ப அதைப்பற்றி கவிதாவோடை கதைக்காமல் விடுறது நல்லது.

**காயத்:** ஏன் மாமா? கதைச்சுப் பாத்தால் நல்லது தானே?

**கனக :** கவிதாவின்ர (F)பைனல் சோதினை முடியட்டும்! இதை இப்ப கதைச்சு சோதினையைக் குழப்பக்கூடா!

**கமல:** ஆனால், அவை ரெண்டு பேருக்குமிடையிலை அப்பிடி ஒரு விருப்பம் இருக்கிறது உண்மை எண்டு அறிஞ்சால், எங்கடை முடிவு என்ன எண்றதை இப்ப கதைச்சு வைக்கலாம்தானே!

**கனக :** ஓம், எங்களுக்கை அது பற்றி ஒரு முடிவுக்கு வாறது பரவாயில்லை.

**கதிர் :** கவிதாவுக்கு இப்ப தெரியத்தேவை இல்லை.

**காயத் :** ஓம், அது சோதினையைக் குழப்பும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனக :** சோதினையைக் குழப்பும் எண்டு சொல்றபடியா, காயத்திரியின் முடிவு எதிர்மறையா இருக்குமோ?

**காயத் :** உடன்பாடோ, எதிர்மறையோ, ரெண்டும் குழப்பும்!

**கனக :** எப்பிடி?

**காயத்:** ஒண்டுகவலையாலை, மற்றது அளவுக்கு அதிகமான சந்தோசத்தாலை!

**கனக :** "ஆகா! அருமை! (F)பைன்! (F)பைன்!"

**கமலா:** இது பற்றி நாங்கள் எடுக்கிற முடிவென்ன?

-சில கணம் எவரும் பேசாது இருக்கின்றனர்-

**கனக:** முதல்லை தாய் தகப்பன் தங்கடை அபிப்பிராயத்தைச் சொல்றது நல்லது.

**கதிர்:** அப்பா! அப்பிடிப் பிரிச்சுப் பாக்கத்தேவை இல்லை!

**கமலா:** எங்கடை சம்மதம் கிடைக்கும் எண்ட நம்பிக்கையில தான் கவிதா இந்த அலுவல்லை இறங்கி இருப்பா!

**கனக:** அது உண்மைதான். ஆனபடியால், எது எப்பிடி இருந்தாலும் நாங்கள் பிள்ளைக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யக்கூடா, இந்த விஷயத்திலை எண்டு நான் நினைக்கிறன்.

**கதிர்:** மற்ற விஷயங்கள் எங்கடை எதிர்பார்ப்புக்கு இல்லை எண்டாலும், சங்கரை நிராகரிக்கிறதுக்காக, நாங்கள் கவிதாவுக்குச் சொல்லக் கூடிய காரணங்கள் ஒண்டுமில்லை!

**காயத்:** சங்கர் நல்ல பிள்ளை, அதிலை ஆரும்குறை சொல்ல ஏலா!

**கனக:** பிறகென்ன, எங்கடை முடிவு தெளிவாக வந்திட்டுது! இப்ப கவிதா சோதினைக்குப் படிக்கட்டும்

-இவ்வேளை சுப்பிரமணியம், ஏலவே ஒரு குற்றியில் வந்து இருந்தவர், தம்பாட்டில் பிதற்றுகிறார்-

**சுப்பிர:** வயது முத்தின குமர் ரெண்டு நடுவீட்டுக்கை கிடந்து நெடுமூச்செறிய, எனக்கென்ன கலியாணம், எண்டெண்ணித்தான் புழுதி அடிச்சுப் பயிர் நட்டுப் பாடுபட்டன்! சிறுசெண்டாலும், ரெண்டு வீடுகட்டி, காசும் குடுத்துக் கட்டி வச்சன்! தனியனா நிண்டு செய்தன்! பலன்? இண்டைக்கு நான் தனிமரம்! அவை, என்னைத்துலைச்சுப் போட்டுத் தோப்பா நிக்கினம்! நிக்கட்டும்!! நிக்கெட்டும் ஓடித்தீர்த்த மாடினாலும், வினைப்பயன் தான் நினைச்சதைத் தான் செய்யும்!.. செய்யட்டும்!.. மருமக்களாவது வராமலே விடப் போகுதுகள்!

-இவ்வேளை கபிலன் உள்ளே இருந்து வந்து-

**கபில:** நான் ஒருக்கா மரகதம் பாட்டீட்டை போயிட்டுவாறன்.

**காயத்:** அம்மப்பா சாப்பிட்டிட்டாரே?

**கபில:** அங்க ரெண்டு பேருக்கும் வோர் நடக்குது! இடியப்பத்துக்கு உப்பில்லை! பால் சொதி தரஇல்லை! பழப்புளி சேர்க்கஇல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறைப்பில்லை! எண்டு அம்மப்பா குளறிக்குளறிச் சாப்பிடுறார்.

**-கபிலன் வெளியேறுகிறான்-**

**கனக:** குளறிக் குளறிச் சாப்பிடுறாரோ! புரக்கடிக்கப்போகுது!

**காயத்:** அம்மாவும் ஆக நூதனம்! கடுஞ்செல்லம்!

**கமல:** மச்சாளுக்கு அவர் முந்தி விடுவாரோ எண்ட கவலை!

**கனக:** பூவோடும் பொட்டோடும் போகவேணுமெண்ட ஐதிகம்!

**-மரகதம் வீட்டு வாசலில் நின்று கபிலன்-**

**கபில:** பாட்டி! மரகதம் பாட்டி!!

**மரக:** ஆர்மோனே? கபிலனே?

**கபில:** ஓம் பாட்டி!

**மரக:** வா ராசா!

**கபில:** என்ன பாட்டி தனிய இருக்கீறீங்கள்?

**மரக:** அவை ரெண்டு பேரும் எங்கையோ போகிட்டினம்! அவை இருந்தாலும் நான் தனியத்தானே!

**கபில:** இந்தாங்கோ பாட்டி!

**மரக:** என்ன ராசா!

**கபில:** சொக்ளேட்!

**மரக:** நீர் சாப்பிடும்! எனக்கேன் கிழவிக்கு!

**கபில:** இந்தாங்கோ! உரிச்சிருக்கு, சாப்பிடுங்கோ! வாயை ஆவெண்ணுங்கோ!

**-கபிலன் மரகதத்துக்கு ஊட்டி விடுகிறான். அவ்வேளை இரத்தினம் ஒரு குற்றியில் இருந்து கொண்டு பின்வரும் பாடலைப் பாடுகிறார்.**

**பாடல்:**

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
  பரிந்து நீ பாவியேன் உடைய
ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி
  உலப்பு இலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
  செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
  எங்கு எழுந்தருளுவது இனியே.

- திருவாசகம் - யாத்திரைப் பத்து - 9 -

**-மரகதம் எதை நினைத்துக் கொண்டாளோ தெரியவில்லை. கபிலனின் கைப்பற்றிக் கொண்டு கண்ணீர் சொரிகிறாள். அன்புக்கு ஏங்கிய பாலை அவள் அது கிடைத்த வேளை நெஞ்சுருகி விட்டாள் போலும்-**

**கபில:** பாட்டி! அழாதையுங்கோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக: அழஇல்லைக்குஞ்சு!... ஔவைக்கு நாவல்பழம் குடுத்த, நல்லூர்க் கந்தனையாநீ!.. நல்லா இருப்பாய் ராசா! மோனே!

கபில: என்ன பாட்டி?

மரக: எனக்கு ஒரு மகன்!

கபில: ஓம் பாட்டி!

மரக: அவன் பிறந்து மூண்டாம் மாதம் அவர் போனார்!

கபில: ஓம்!

மரக: பெண்ணாப் பிறந்தும் பாவி தோட்டம் செய்தன்! பெடியனை வளத்தன்! படிப்பிச்சன்! அவனும் படிச்சு வாத்தியா வந்தான்!

கபில: எங்க பாட்டி படிப்பிச்சவர்?

மரக: கடைசியா திருகோணமலையிலை! தொடக்கத்திலை ஊரோடை! எனக்கு உதவியா இருக்குமெண்டு, அவனுக்கு கலியாணத்தைச் செய்து வச்சன்! அவன் இருக்கும்வரை நல்ல பிள்ளையாகத்தான் அவன் இருந்தான்!

கபில: உங்கட மகனுக்கு என்ன நடந்தது பாட்டி!

மரக: மனிசருக்கு நடக்கக் கூடாதது நடந்திது!

கபில: என்ன பாட்டி?

மரக: எண்பத்தி மூண்டிலை, வெட்டிச்சரிச்சாங்கள் வேசை மக்கள்!!

கபில: ஐயோ!

மரக: மலை போல ஆம்பிளையை தறிச்சு விழுத்த மனம் வந்துதே அவங்களுக்கு!

கபில: மனிசர், அரக்கராகிற நேரங்களும் இருக்குப்பாட்டி!

மரக: ஒருதாய் பெத்த பிள்ளைதானே, என்ற பிள்ளையை வெட்டினவன்!

கபில: மனங்கள் பழுதாகினால் மனிசர் பிசாசுதான், பாட்டி!

மரக: புருஷனைப்பாதிலை பறிகுடுத்த கவலையிலை, அவள் பாவி என்னைக் காணப் பிடியாமல், பாயிறாள்! அவளும் பாவம்!

கபில: உங்கள்ளை ஏன் கோவிப்பான்?

மரக: பேத்தியும் தாயைப் போலையே வந்திட்டாள்! நான் தனியனாப் போனன்!

-மகாலட்சுமி வெளியிலிருந்து வருகிறார்-

மகால: என்ன கபிலன், உமக்குப் பாட்டியோடை நல்லாப்பொழுது போகுதுபோல இருக்கு?

கபில: இப்பதான் வந்தனான் மாமி!

மகால: அதுதான் நல்லது! பாட்டிக்கும் பிராக்குத்தானே! சும்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிற நேரங்கள்ளை நீர் படிக்கவேணும் கபிலன்!

*கபில:* ஓம், மாமி! நான் போயிட்டு வாறன்!

*மரக:* ஓம், நேரம் இருக்கேக்க வாரும்! நாங்கள் இருக்கேக்கவாரும்!

*கபில:* ஓம் மாமி!

**-கபிலன் வெளியேறுகிறான்-**

*மரக:* இம்! இனி இதிலை இருந்து ஊரவைக்குக் கதைசொன்னது போதும்! உள்ளேபோய் உரிய இடத்திலை இருக்கலாம்! கெதியா!

**-மரகதம் எழுந்து உள்ளே சென்று விடுகிறார். மகாலட்சுமியும் உள்ளே போகிறார் இதனை அடுத்து முன்மேடையில் உள்ளே குற்றிகளில் வைத்திலிங்கம், இரத்தினம், சுப்பிரமணியம், அழகானந்தம், விசாலாட்சி ஆகியோர் இருக்கை கொள்வர். அவ்வேளை கவிதா, மல்லிகா, சங்கரன், ராஜன் அங்கு வருகின்றனர்-**

*ராஜ:* **(புழுகத்தின் உச்சியில் நின்று, தன் உல்லாச சுபாவத்துக்கமைய)** எங்கள்பிதாமகர்களுக்கு, தேசமாதாக்களுக்கு ஆயிரம்வணக்கங்கள்

*இரத்தி:* **(அதே உற்சாகம், உல்லாசம் நிறைந்த பதிலாக)** மாதம் மும்மாரி பொழிகிறதா!! கள்வர்பயமின்றி, மக்கள்நலமுடன்வாழ்கிறார்களா?!

**-அனைவரும் சிரிப்பார்கள் என்று நம்புவோமாக-**

*வைத்தி:* ஆர், பல்கலைக்கழகத்துப்பிள்ளைகளே? **(அவருக்குரிய சோர்வில் தான் இவ்வாறு கேட்பார்).**

*இரத்தி:* பல்கலைக்கழகத்துப் பிஞ்சுகள், முதியோர்இல்லத்துப் பழங்களைப் பார்க்க வந்திருக்குதுகள்!

*கவிதா:* ஓமையா! உங்கள் எல்லாரையும் பாத்து நாளாகுது, அதுதான்.

*அழகா:* மண்டகப்படி வச்சு மரணத்தைக் காத்திருக்கிறமனிசர் நாங்கள்! முதுமை எண்டால் புதைகுழிக்க இறங்கிற பயணம்! எங்களை நீங்கள் பாத்தென்னபடிக்கப்போறீங்கள்? உங்கடை பிரசங்கிமார், பேராசான்கள் ஆய்வுக்கட்டுரை எழுதப் பணித்திருப்பினம் வந்திருப்பியள்!

*இரத்தி:* அழகானந்தத்தார்! எழுத்தாளர் நீங்கள்! கதிஇழக்கினும் கட்டுரை இழக்கிலோம் மறந்துவிடக்கூடாது!

*அழகா:* தனக்குத் தனக்கு நடக்கேக்கை அவலம், அவலம்தான்!.. வெறும் அவலந்தான்! மற்றவனுக்கு நடக்கேக்கை பார்த்துப் பரிவும் பயமும் கொள்ளேக்கைதான் அவலம், அவலச்சுவையாக இருக்கும்.

*இரத்தி:* பிள்ளையள்! ஊருக்கெழுதிறவையும், பிரசங்கிமார்பலரும்இருந்தும், எழுதினவனொருவன் ஓஞ்சொழிஞ்சு ஒதுங்கிக் கிடக்கிறதைக் காணமாட்டாமல் இருக்கினமே, எண்ணிறதைக் கண்டுதான் அழகானந்தத்தார் வேதனைப்படுகிறார். என்ன செய்யிறது? அவை அவைக்குத் தன்தன் சோலி! பொழுது கிடைக்கிற வேளையள்ளை எழுதுகினம், பேசுகினம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வைத்தி:** எழுதுகிறம், பேசுகிறம் எண்டதுக்காக ஊர்ச்சோலி எல்லாத்தையும் தன்தலையிலை சுமக்க ஏலுமே!!! இரத்தினம்! உது பெரும்பிழை!

**இரத்தி:** **(தன்னியல்பில்)** பிழை எண்டால், 'எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியே கம்பனே'!

**சுப்பி:** கச்சியும் கம்பனும்தான்! குமர் கிடந்து பெருமுச்சுவிட்டால் பெரும் பழி எண்டு, என் வாழ்வை விட்டு, அவைக்கு வழி காட்டினன்! கடைசியா எனக்கு மிஞ்சினது காலிடவுக்கை கச்சையும் கையிலை கம்பும்தான்!

**சங்கர்:** நல்லதைச் செய்த நீங்கள் கவலைப்படக் கூடாதையா!

**விசாலா:** **(வலது கோடியில் இருந்தவர்)** உதார்? சாந்தியே! இஞ்சவா பிள்ளை! நீ கட்டாயம் வருவா(ய்) எண்டு எனக்குத் தெரியும்! என்ர பேத்தி என்னைக் கை விடாள், கடவுள் கைவிட்டாலும்.

**கவிதா:** ஆச்சி! அது நாங்கள். **(அவளருகே செல்கிறாள்)**

**வைத்தி:** விசாலாட்சி! அது பள்ளிப் பிள்ளையள், உன்ர பேத்தியல்ல!

**விசாலா:** ஆ..! அதுகளெண்டாலும் இடைக்கிடை வருகுதுகள்! நல்ல பிள்ளையள்! நல்லா இருக்கவேணும்!

**இரத்தி:** பிள்ளையள்! எங்களுக்கு இஞ்ச ஒரு குறையுமில்லை! சுருங்கச் சொன்னால், உச்சித் தேவையிலை இருந்து உள்ளங்கால் தேவைவரை இங்கை எல்லாம் தருகினம்!

**ராஜு:** ஐயா நொடி ஒண்டு விடுகிறார்! விளங்கஇல்லை!

**சுப்பிர:** இரத்தினத்தார் பழைய கூத்துக்காரன்! பபூன் நடிகர்! சிலேடையாத் தான் கதைப்பார்!

**இரத்தி:** உச்சந்தலை! உள்ளங்கால்! ஒண்டு தேய்க்கிறது! மற்றது! தேயிறது!

**சங்கர்:** ஆ! தலைக்கு எண்ணை தொடக்கம் காலுக்குச் செருப்புவரை!

**இரத்தி:** ஆ! கெட்டிக்காரன்! நீ படிப்பா(ய்)!!

**விசாலா:** இஞ்சார்! அதுகளோடை ஆசையா நாலு கதை கதைக்கவிடாமல், அகடவிகடங்களோடை நிக்கிறியள்!

**இரத்தி:** சரி, பின்னை உங்கடை பாடுகளைச் சொல்லுங்கோ!

**வைத்தி:** நாங்கள் பிறக்கும்போதே அனாதையளா, அனாதரவா பிறந்தனாங்களில்லை!

**சுப்பிர:** ஓம், எங்களுக்கும் தாய்தகப்பன், அண்ணன் தம்பி, மாமன் மச்சான், அயல் உறவு எண்டு சூழல் சுற்றம் இருந்ததுதான்!

**விசாலா:** நானும் சடங்கு செய்து அவரோடை சீவிச்சு நாலு பிள்ளையைப் பெத்தவள்தான் மலடியல்ல! கன்னி கழியாதவளுமல்ல!

**அழகா:** நான், கலியாணமென்னகலியாணம்எண்டுஇருந்திட்டன். ஆச்சியும் அக்கறைப்படுத்த இல்லை! அயலும் அதை யோசிக்க இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னை போகுது சனியன் எண்டு பேசாமல் இருந்திட்டன்!

**சுப்பிர:** நானும், சகோதரிமாருக்கு அடிச்சுக்குடுத்துக்கட்டிகுடுத்து, பிறகு அவேன்ர பிள்ளையளுக்கு உழைச்சுக்குடுத்து, கடைசியிலை எல்லாரும் பின்வளத்தைக்காட்ட, பற்றறுத்து இங்க வந்திட்டன்!

**இரத்தி:** பாத்தியளே பிள்ளையள்! பற்றறுத்தவை கூடுற பேரின்பப் பெருநிலையம் இது! இவேன்ர வழிக்குத்துணை கைத்தடி! வாழ்வுத்துணை கைதடி!

**வைத்தி:** பிள்ளைகுட்டிகள், பேரன்பேத்தியளோடை வாழுறசுகம்! அதுக்கு ஈடிணை இல்லை! பிள்ளையளெல்லாம் குடும்பமா வெளிநாடு போக, அவவும் கண்ணைமூட, நான் தனியனாப்போனன்.

**இரத்தி:** என்னை வச்சுப் பாக்கிற நிலையிலை என்ர மகளும் மருமகனும் இல்லை!

**கவிதா:** ஏனையா?

**இரத்தி:** அதுகள் தங்களைத் தாங்கள் தள்ளவே கதிஇல்லாமல் நிக்குதுகள்!

**மல்லி:** நீங்கள் சொல்றது விளங்க இல்லை ஐயா!

**இரத்தி:** பொருள் பண்டத்து விலை எல்லாம் நல்லூர்ச் சப்பறத்து அஞ்சு முடியிலும் எறிக்குந்திக்கொண்டு, எங்களைக் குனிஞ்சுபாத்து நெய்க்காட்டுதுகள்!

**சங்கர்:** விலை வாசியைச் சொல்றார் இரத்தினமையா!

**இரத்தி:** விலை எங்களுக்கு வாசியா இல்லை! விக்கிறவைக்குத்தான் எப்பவும் வாசியா நிக்குது!

**ராஜு:** யுத்த நிலைமை.

**இரத்தி:** ஓ, அது எல்லாருக்கும் ஒரு சாட்டாப் போச்சுது! இந்த வள்ளல்ல நானுமேன் பிள்ளை குட்டியளுக்குப் பாரமா இருக்கவேணு மெண்டிட்டு இங்க ஓடி வந்திட்டன்!

**சுப்பிர:** விரலுக்குத்தக்க வீக்கமெண்ணுவினம்! என்ர தங்கைமாற்றை விரலுகள் அளவுக் கதிகம் வீங்கி முட்டிக்கிடந்திது!

**கவிதா:** ஏனையா? என்ன நடந்திது?

**சுப்பிர:** எங்கட நிலவரத்தை மறந்து உத்தியோக மாப்பிளை வேணுமெண்டு நிண்டினம்! அவைக்கு மாப்பிளைமார் தேடி முடிய, என்ர மாப்பிளை வயதுகடந்திட்டிது எண்டினம்ஊரவை! நானும் வெக்கத்தைவிட்டுக் கேளாமல் இருந்திட்டன்! அண்ணற்றை பெடியன் வெளிநாடு போக இருவதனாயிரம் வேணுமெண்டு, தின்னாமல் குடியாமல் கிடந்தான்! நான் பொறுக்கமாட்டாமல், மாறிச்சாறிப் பொறுக்கிக் குடுத்தன்! அது தங்கைமாருக்குப் பொறுக்க இல்லை! வெளிநாடு போனவன் போனது தான்! ஒரு கடதாசி கூட இல்லை..!

**வைத்தி:** இனிப்பு இனிப்பு எண்டா விளங்காது! திண்டு பாத்தவனுக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அதின்ர அருமை தெரியும்!

**மல்லி:** ஏனையா அப்பிடிச் சொல்றீங்கள்?

**வைத்தி:** மனிசிபிள்ளையளோடை எடுத்தபட மொண்டுஎன்னோடை கிடக்கு! அதைஅடிக்கடி எடுத்துப்பாப்பன்! அந்தநேரத்துச்சுகம்ஒருசுகம்தான்!

**இரத்தி:** இஞ்ச, உசாரான ஆம்பிளை நான் தான்! தொட்டாட்டு வேலை எல்லாம் நான்தான்! ஓடிஓடிச்செய்வன்! அறுவத்தஞ்சுதானே வயது!

**விசாலா:** எனக்கும் அதுதான் வயசு!

**இரத்தி:** அவவைப் பாக்கிறவை முன்னூற்றிஅஞ்சு மதிப்பினம்!

**விசாலா:** என்ர பொடியன் ரெண்டும் வெளியாலை!

**மல்லி:** எந்த ஊரிலை ஆச்சி?

**விசாலா:** வெள்ளைக்காரன் தேசத்திலை எண்டு கதைச்சினம். என்ர பெட்டையள்என்னைப்பாக்கமறுத்திட்டினம்! பேரப்பிள்ளையளின்ர அட்டூழியம் தாங்க முடிய இல்லை!

**ராஜூ:** ஏனாச்சி? என்ன செய்தவை?

**விசாலா:** கல்லாலை எறிவினம்! கண்டபடி பேசுவினம்! சுடு தண்ணி எத்துவினம்! தாய்தேப்பன் ஏனெண்டு கேளாயினம்!

**அழகா:** பிள்ளையள்! முதுமை, எப்ப துவங்குது? சொல்ல முடியுமோ?

**சங்கர்:** அறுவது வயதிலை எண்டு புத்தகங்கள் சொல்லுது!

**மல்லி:** அதாலைதான், அறுவதிலை மணிவிழாக் கொண்டாடுறவை!

**இரத்தி:** முதுமை வரை வாழ்ந்து போட்டீர்! இனிக்காணும் போகிட்டு வாரும் எண்டு விழா எடுத்து விடுகிறவையோ?

**ராஜூ:** அறுவதிளை அறளை பேர்ரது எண்டு சொல்றவை!

**கவிதா:** அதாலைதான் அறுவதோடை பென்ஷன் குடுக்கிறவையோ?

**இரத்தி:** பென்ஷன் குடுக்கிறது அரசாங்கம்! அரசாங்கம் நடத்திறவைக்கு வயது எழுவத்தேழு, எண்பது, தொண்ணூறு!

**ராஜூ:** அதாலைதான்அரசாங்கங்கள்அறளைபேந்தகதையள்கதைக்கிறது!

**அழகா:** முதுமை, கருவிலை தொடங்குதோ! அல்லது பிறப்போடை தொடங்குதோ எண்டதுதான் பிரச்சனை! அறுவதிலையோ எண்டதல்ல!

**கவிதா:** பிறந்தண்டு தொடக்கம் ஒண்டு, ரெண்டு, மூண்டெண்டு வயது கூடிக் கொண்டு தான் போகுது!

**ராஜூ:** இதை விளங்காமல் நாங்கள், வயது வந்தவை! வயது போனவை! எண்டு பிரிக்கிறம்.

**இரத்தி:** நாங்கள் தான் 'ஸ்டேஷன்', ரெயில் வயது!

**மல்லி:** ஐயா பிறகொரு நொடி விடுகிறார்! விளங்க இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரத்தி:** தொடக்கத்திலை வயது எங்கடை இடத்துக்கு வந்து கொண்டிருக்கும், அதுவரை நாங்கள் வயது வந்தவை!

**அழகா:** ஓம், பிறகு வயது எங்களைக்கடந்து போய் கொண்டிருக்கும்.

**இரத்தி:** அப்ப நாங்கள் வயது போனவை!

**விசாலா:** நீங்கள் வயது வந்த பிள்ளையள்! நாங்கள் வயது போன மனிசர்!

**வைத்தி:** இந்தச் சொற்கள்தான் எங்களுக்கை பிரிவனையைக் கொண்டு வந்திட்டுது!

**விசாலா:** வயது போனவை எண்டா எல்லாருக்கும் இளக்காரம்தான்! பேரப்பிள்ளையளே மதிக்காத இடத்தலை, ஊர் மதிக்குமே?

**சுப்பிர:** அண்ணற்ரை பெடியனுக்குக் காசு குடுத்தது அவளவைக்குப்புடிக்க இல்லை எத்தினை நாளைக்கு நான் திட்டும் பேச்சும் தாங்கிறது. பேசாமல் இங்க வந்திட்டன்!

**வைத்தி:** மகனும் நானும் ஒரு கன்னை! பேரப்பிள்ளையள் மறுகன்னை! நிண்டு பந்தடிக்கிறனாங்கள், முத்தத்திலை! பேரப்பிள்ளையள் ரெண்டு பந்திலை என்னை அவுட்டாக்கிப் போடுவாங்கள்!

**விசாலா:** என்ர பேரன் பேத்தி வீட்டாலையே அவுட்டாக்கிப் போட்டுதுகள் என்னை!

**இரத்தி:** இங்கை ஒரு கரைச்சலும் இல்லை! செத்தால் தாட்டு விடுவினம், அல்லது 'மெடிக்கல் கொளிஜு' க்குக் குடுப்பினம்! பிள்ளையள் பாத்துப் படிக்க.

**சுப்பிர:** செத்த பிறகு என்ன வெக்கம் ரோசம்!

**இரத்தி:** அதுதானே! வடிவாப் பாத்துப் பிள்ளையள் படிக்கட்டும்!

**அழகா:** மனுசர் மாடா, குதிரையாப் போகக்கூடா! 'கலையரசு' ஐயா கடைசி காலத்திலை பகிடியாச் சொல்லுவார்.

**ராஜு:** ஆரையா 'கலையரசு'!

**கவிதா:** கலையரசுசொர்ணலிங்கம். நாடகபிதாமகர். நவாலியிலைபிறந்தவர்.

**அழகா:** அவர் சொல்லுவார், தான் ஒரு பந்தயக்குதிரை எண்டு! மைதானத்திலை நிண்டு ஓடும்வரை சனம் கூடி நிண்டு ஆரவாரம் செய்யும். கொஞ்சம் ஏலாமல் போக தேடுவாரில்லை! ஏலும் வரை கொள்ளும் புண்ணாக்கும் எள்ளும் வைப்பினம்!

**இரத்தி:** ஏலாமல் போக, தோட்டத்திலை அவிள்த்துக் கலைச்சுவிடுவினம், தேடித்தின்னிறதைத்தின்னெண்டு!

**அழகா:** அப்ப அவர் சொன்னதின்ர தார்ப்பரியம் எங்களுக்கு முழுமையா விளங்கஇல்லை. இப்பதான் வடிவா விளங்குது!

**சங்கர்:** ஒரு கலைஞன் கடைசிவரை முதுமை அடையிறதில்லை எண்டு சொல்லப்படுகுதே!

**இரத்தி:** தேடுவாரத்தவனா விடேக்க அவனும் தளர்ந்து போகத்தான் செய்யிறான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அழகா:** 'கலையரசா' ஆக்களைக்கண்டால்சந்தோசப்படுவார். "நீங்கள்வந்து ஒரு மணித்தியாலம் இருந்திட்டுப்போனால் நான் ஒரு வருஷம் கூடச் சீவிப்பன்" எண்டு அடிக்கடி சொல்லுவார்.

**இரத்தி:** அவருக்கு அருமையான பிள்ளையள் வாச்சிருந்திது. மகன், தாய்தேப்பனை, பிள்ளையளைப் பாக்கிறது போல, அன்பா, ஆதரவாப்பாத்தார். எல்லோருக்கும் இப்பிடிக்கிடைக்கிறதில்லை.

**விசாலா:** எனக்கு வரவர ஊரிப்பட்ட வருத்தம்! முன்னமெண்டால் டொக்டர் மருந்து தருவார். ஆரோ பொய் சொல்லி அவற்றை மனதைக் கெடுத்துப் போட்டினம்.

**ராஜூ:** ஏன், என்ன நடந்தது ஆச்சி?

**விசாலா:** எனக்கு ஒரு வருத்தமுமில்லை! சாலம் விடுகிறா, எண்டு ஆரோ அண்டி விட்டுதுகள்! 'உனக்கு ஒண்டு மில்லை' எண்ணிறார். மருந்துதாறாரில்லை! நீங்களேனும் அவரிட்டைச் சொல்லிப் பாருங்கோ!.. பேரப்பிள்ளையள்வராதுகள்! ஆ!... சா! வருங்கள்!

**வைத்தி:** மனிசருக்கு மனிசர் அன்பு செய்யவேணும்! அது போதும்! அடுத்த பிறவியிலேனும் பிள்ளைகுட்டியளோடை இருக்க குடுத்து வச்சிருக்கவேணும்! சுற்றம்சூழமனிசன் வாழவேணும்!.. அன்பு செய்யவேணும்!

**அழகா:** அன்பு செய்யிறதெண்டால் நெஞ்சிலை வறுமை, வெறுமை இருக்கவேணும்!

**மல்லி:** ஐயா! நீங்கள் சொல்றது விளங்க இல்லை!

**சங்கர்:** ஓம், நெஞ்சிலை வறுமைவேணும், வெறுமை வேணும் எண்ணிறீங்கள், அப்பிடியெண்டால்?

**அழகா:** என்ரை சொத்து, நிலம், புலம், பிள்ளை, குட்டி எண்ட பற்று நெஞ்சிலை நிறைஞ்சிருக்கிறவையாலை அன்பு செய்யஏலாது.

**கவிதா:** ஓ, பற்றில்லாத வெறுமை, பற்றில்லாத வறுமை நெஞ்சிலை இருக்கவேணும் எண்டு சொல்றீங்கள்?

**அழகா:** நான் ஆர் இப்பிடிச் சொல்ல? ஒரு பெரிய மேதை, ஞானி அப்பிடிச் சொன்னார்!

**ராஜூ:** அவற்ரை பேர் என்ன?

**அழகா:** பேர் நினைவிலை இல்லை! சொன்னதுமட்டும் நீக்கமற நிறைஞ்சு நிக்குது!

**சுப்பிர:** சகோதரி ஒருத்தியின்ர மகள், என்ர மருமகள் உங்களைப்போல வடிவாய் படிச்சாள். படிப்புக்கு காசு களஞ்சு எண்டு என்னாலை ஆனதைக்குடுத்துதவினன். பட்டமளிப்புக்கு என்னையும்கூட்டிப் போவாளெண்டுநம்பிஇருந்தன். தாய்தேப்பனைக்கூட்டிப்போனாள்! எனக்குச் சொல்லவும் இல்லை! நான் தனியாள் எண்டது அண்டைக்குத்தான் எனக்குக் கடுமையா உறைச்சுது!

**விசாலா:** விறாந்தைக்குவரவிடாயினை! வாறவைகண்டால்வடிவில்லையாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவா வச்சிருந்தா நானேன் அசிங்கமாக் கிடக்கிறன்? கோடீக்கை பத்தி இறக்கி, சாக்குப்போட்டு விட்டாளே கிடவெண்டு! பெத்த பிள்ளையாலை இப்பிடியும் செய்ய ஏலுதே! என்ர தொப்புள் கொடியை அறுத்துப் பிரிஞ்சது இப்பிடிச் செய்யுதே! (அழுகிறார்)

**கவிதா:** ஆச்சி! அழாதையுங்கோ! இஞ்சஇப்பவடிவாவச்சிருக்கினம்தானே!

**விசாலா:** சிம்மாசனத்திலை இருத்திக் குஞ்சம் விசுக்கினாலும், வீட்டிலை இருக்கிற சுகம்வருமே?

**இரத்தி:** என்னதான் இருந்தாலும், விசாலாட்சி அக்கா சொல்றதுபோல, அனாதை எண்ட நினைப்பு இடை இடையே தலைகாட்டத்தான் செய்யுது! நெஞ்சுக்கென்ன எதையும் நினைக்கும்! நாங்கள் தான் நிலைமக்குத்தகுந்தபடி நடக்கவேணும்!

**அழகா:** பிள்ளையள்! உங்கடை பெரியவை கூடி, முன்னொரு காலம், எனக்கும் நிதி திரட்ட வெளிக்கிட்டவை!

**மல்லி:** பிறகு என்ன நடந்ததையா?

**அழகா:** கூட்டம் கூட்டி, அபிப்பிராயங்கள் தாராளமாச் சொன்னவை?

**ராஜு:** அது சிலவில்லாத அலுவல்தானே! அள்ளி எறிவினம்!

**அழகா:** காசு போடுற கட்டம் வந்ததும், சால்வையை உதறித் தோள்ளை போட்டுக் கொண்டு காசிக்குப் போகிட்டினம்! மெய்யே பிள்ளையள்! கா. சி. குலரத்தினத்தார் செத்துப்போனாரெண்டு பேப்பர்லை பாத்தம்!

**சங்கர்:** ஓம், திடீரெண்டு செத்துப்போனார்!

**சுப்பிர:** குடுத்து வச்ச ஆத்துமா!

**அழகா:** இரங்கல் உரையளும் நடந்ததாப் பேப்பர் எழுதிச்சிது!

**கவிதா:** ஓம், பேசினவை கனபேர்!

**அழகா:** அவரிட்டை நிறையப்புத்தகங்கள் இருந்ததாச் சொல்றவை!

**மல்லி:** அதைப் பற்றியும் பேசினவை.

**அழகா:** வாசிச்சனான்! பல்கலைக்கழகத்துக்குக் குடுக்க வேணும் எண்டு ஒருத்தர் சொல்ல, மற்றொருத்தர் ஆவேசமா மறுத்துதான் போட்டிருந்தார்.

**ராஜு:** ஓம், செத்த வீடெண்டாலும், சனத்தைக் கண்டால் சன்னதம் கொள்ற, பேச்சாளர் இருக்கினம்.

**அழகா:** அவற்றை பேராலை ஒரு நூல் நிலையம் கட்டவேணும் எண்டு விளாசி இருந்தார் அவர்!

**இரத்தி:** வாய்ப்பந்தல் போட நெஞ்சிலை நோகப்போகுதே!

**அழகா:** உப்பிடித்தான் முன்னம் வித்தியற்றை புத்தகங்களும், குளத்தோடை கோவிச்சுக் கொண்டு, பலகை படம் பல்லாணி தைக்கத், தெருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவா ஆத்தலைஞ்சு, இப்ப ஒரு கைபடக்கிடக்கெண்டு கேள்வி! நாலுபேர் படிக்கக் கிடக்கிறது. நல்லது!

**இரத்தி:** பெத்தவன் போகுமுன்னம் குமரைப்புக்ககம் அனுப்பிப் போட வேணும்! புத்தகமும் அப்பிடித்தான், உடையவன் சாகுமுன்னம் நூலகம் போகவேணும்!

**அழகா:** இல்லையெண்டால் ரெண்டுமே பலகை பட்டுக், கற்பழிந்து, பொற்பிழந்து போகும்!

**விசாலா:** ஊரிலை பிரச்சனை வந்த நேரம் வீட்டை என்னைத்தனிய விட்டிட்டு மோளும் பிள்ளையளும் போய்விட்டினம், நான் பிச்சைச் சீவியம் சீவிச்சன்! பிரச்சனை முடிய, திரும்பிவந்தவை, என்னைக் கண்டதும், 'நீ இன்னும் இருக்கிறியே'? எண்டினம் இனியும் ஏன் இருப்பான் எண்டு நான் கால் நடையா வந்து சேர்ந்தன்!

**வைத்தி:** எனக்கு எழுவத்தெட்டு ஆகுது! என்னை ஒட்ட வயதுக் காரரெல்லாம், உறவிலும்சினெகிதத்திலும், போய்ச்சேந்திட்டினம். என்ர சினேகிதர்லை கடைசி ஆள் போனவருஷம் போயிட்டான். நான் ஒருத்தன் தான் இன்னும் காத்திருக்கிறன்.

**இரத்தி:** யமன்ர எருமை மோட்டச்சயிக்கிளுக்குக்காத்துப் போகிட்டுதாக்கும், அதுதான் கணகாலம் ஆளை இந்தப் பக்கம் காண இல்லை!

**சுப்பிர:** முன்னம் தோட்டத்தலை புழுதி அடிச்சகாலத்திலை கோயிலு மில்லைக், குளமுமில்லை! இப்ப தேவாரம் பாடுறன்! திருவாசகம் ஓதுறன்! இங்க நடந்த தேவாரப் பாட்டுப் போட்டியிலை எனக்கு இரண்டாம் இடம்!

**ராஜு:** முதலாம் இடம் ஆருக்கு?

**சுப்பிர:** அது ரத்தினத்தாருக்குத்தான்! அவர்கூத்துக்காரன்! ஒருத்தரும் என்னை வந்து பாக்கிறதில்லை! நானும் எதிர்பார்க்கிறதில்லை! என்ர கடமையளைச்சரிவரச்செய்திருக்கிறன். கடவுள் கைவிடமாட்டார்!

**விசாலா:** ஆர் வந்து பாத்தென்ன? கடவுள் விட்டவழி! பிள்ளையள்!. நீங்கள் நல்லா இருப்பியள்!

**வைத்தி:** கிழடுகள் எண்டால் ஊருக்குதவாததுகள் எண்டதாப்போச்சுது!

**இரத்தி:** ஆர்சொன்னது? இந்த ஊரை இப்ப ஆளுற எசமானுக்கு வயது எழுவத்தெட்டு!

**வைத்தி:** அப்ப என்ர வயதுக்காரன்! பேந்தென்ன??

**இரத்தி:** அவர் "வல்லடி வழக்கைச் சொல்லடி மாமி" எண்டு வரிஞ்சு கட்டிக் கொண்டு சண்டைக்கு நிக்கிறார்!

**வைத்தி:** அழகானந்தத்தார்! நீங்கள் எழுதி, சுப்பிரமணியத்தாரும், இரத்தினமும் நடிச்ச அந்த அதை, பிள்ளையளுக்கு நாங்களொருக்கா, செய்து காட்டினாலென்ன.

**சுப்பிர:** **(வெட்கத்தோடு)** அதை ஏன் இப்ப! பிள்ளையள் பாத்துச்சிரிக்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சங்கர்:* இல்லை ஐயா! செய்து காட்டுங்கோ!

*கவிதா:* ஓமைய்யா!

*இரத்தி:* சரி பிள்ளையள் ஆசைப்படுகிது, செய்துவிடுவம், மணியத்தார்.

*சுப்பிர:* பின்னைச்சரி!

*ராஜூ:* அச்சா ஐயா!

*இரத்தி:* பிள்ளையள்! இதிலை, நான் பத்துவயதுப்பெடியன், மணித்தார் கிழவன்! அவருக்கு 'ஒறிஜினல்' பாத்திரம்.

*வைத்தி:* கதையை விட்டிட்டுத் துவங்குங்கோ! வடிவாச் செய்யுங்கோ!

**-ஏனைய அனைவரும் தரையில் இருக்க, சுப்பிரமணியமும் இரத்தினமும் ஆரம்பிக்கின்றனர்-**

*கிழவன்:* இந்தா! சின்னப்பொடியா!

*பையன்:* என்ன அப்பு?

*கிழ:* உன் பாட்டன் பாட்டியை உனக்குத் தெரியுமா?

*பை:* ஓ! தெரியுமே!

*கிழ:* இருக்கிறார்களா?

*பை:* பாட்டி இருக்கிறா. பாட்டன் போய்விட்டார்!

*கிழ:* எப்போ?

*பை:* நான், சின்னவனாக இருக்கும்போது!

*கிழ:* அட! நீ! சின்னவனாக இருக்கும்போதா?

*பை:* ஓம்!

*கிழ:* அவரை, உனக்கு நினைவிருக்கிறதா?

*பை:* ஓம்! நான்றாக நினைவிருக்கிறது!

*கிழ:* எப்படி இருப்பார்?

*பை:* வழுக்கைத்தலை!

*கிழ:* இம்! வேறு?

*பை:* பிடரித்தாள்வாரத்தில் மட்டும் வெழுத்த சணல் தும்ப போல நாலைந்து தலைமயிர்!

*கிழ:* அப்படியா?

*பை:* அவற்ரைத் தேடிப்பிடித்து ஒன்றாக்கி முடிந்து விடுவதில் அவர் கவனம்!

*கிழ:* முடிச்சு நிற்குமா?

*பை:* அவிழ்த்து விடுவது எங்கள் பொழுது போக்கு!.

*கிழ:* சிரிப்பாரா? கோபிப்பாரா?

*பை:* பொல்லால் விட்டெறிவார் 'போக்கிலிகள்' என்று சொல்லி!

*கிழ:* பாவம் பாட்டன்! இம்! சொல்லு!

*பை:* கடுங்கோடையில் குறுக்குமறுக்காய் வெடிப்பு ரேகை விழுந்த வயற்களிநிலம்போல சுருக்கு விழுந்தமுகம்!

*கிழ:* ஓ கோ!

*பை:* செத்தவர் போல் வாய் பிளந்து கிடக்கும்! பல்லில்லை

*கிழ:* பாவம்! சாவுக்காக வாய்பிளந்து காத்திருந்தவர் போலும்!

*பை:* என்னவோ அறியேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எழுந்து நின்றால்
கேள்விக்குறியாய்
வளைந்து நிற்பார்!

கிழ: வாழ்க்கையை
கேள்விக்குறியாய்
வகுத்தவர் போலும்!
பின்னடிக்கிடைஞ்சலாய்க்
கிடந்தவர்போலும்!
இம்! சொல்லு தம்பி!

பை: சொல்ல சுவையாய்
என்ன இருக்கிறது?

கிழ: எனினும் சொல்!

பை: ஞாபகமறதி, நடுக்கம்
நோய் நொடி, புறுபுறுப்பு,
கோபம், தளர்ச்சி,
தள்ளாமை என்று
அனைத்தும் அபசுரம்!

கிழ: பாவம், உன் பாட்டன்!
வாழ்க்கைச் சுருதியைத்
தேடி மீட்ட மறந்தவர்!
முதுமை வினையைக்
கொத்தி எரித்தவர்!

பை: ஓம், அப்பு! அவர்!
போனதே நல்லது!
ஆயினும்
கொட்டைப்பாக்குக்
குடுமியை குலைத்து
சீண்டிச் சிரிக்கத்தான்
ஆளில்லை!

கிழ: அப்ப, நீ இன்னும்
வளரவில்லை! அது சரி,
அதற்குத்தான் பாட்டி
இருக்கிறாளே உனக்கு!

பை: அவ வித்தியாசம்!

கிழ: எப்படி?

பை: அவ, கூனவில்லைக்
குறுகவில்லை!

கிழ: தலை நரைத்திருக்குமே?

பை: நரைத்தாலும் ஆள்
நரைக்கவில்லை! நல்ல
சுறுசுறுப்பு!

கிழ: நீ கெட்டிக்காரன்! விஷயம்
புரிந்தவன் வேறுமனே
விஷமம் புரிபவனல்ல!

பை: பாட்டி கதை சொல்லுவா!

கிழ: வாழ்க்கைக் கதையைப்
புரிந்த கிழவி!
என்ன கதை சொல்லுவா?

பை: கந்த புராணம் முதல்
காகம் வடை வரை!
பாட்டும் பாடுவா!

கிழ: பாடுவாவோ?

பை: சோக்காப் பாடுவா!
தேவாரம் திருவாசகம்,
ஆழ்வார்பாசுரம்
இராமலிங்க சுவாமிகள்
பட்டினத்தார் பாரதியார்
படப்பாட்டு மெட்டுகள்,
சுந்தராம்பாள் ரமணியம்மா
என்று வந்து
வைரமுத்து சாந்தனோடு
இந்த மண்ணிலும்
சொந்தமாய் வந்துநிற்பா!

கிழ: இம்! கெட்டிக்காரக்கிழவி!
இவளோடு வாழ்ந்துமா
உன் பாட்டன் கிழமாய்ப்
போனான்?

பை: அப்படி அல்ல அப்பு!

கிழ: பின், எப்படி என்கிறாய்?

பை: என் பாட்டனோடு
பல்லாண்டு வாழ்ந்தும்
பத்தைப்பெற்றும் என்
பாட்டி கூனிக்குறுகிக்
கிழமாகிப் போகாமல்
எப்படி நிமிர்ந்து நின்றாள்?
என்று கேளுங்கள் தாத்தா!

கிழ: அதுவும் சரிதான்!

பை: அதுவே மிகச்சரி தாத்தா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழ: தம்பி! உன்பெயரென்ன?

பை: குருபரன்!
பாட்டி வைத்த பெயர்!
நல்ல பெயரா தாத்தா?

கிழ: அருமையான பெயர்!
உன் பாட்டி வைத்த
பெயரல்லாவா? அப்பன்
சுவாமியின் பெயர்!

பை: அப்படியா? நீங்கள்
சொன்னதை பாட்டியிடம்
சொல்வேன் அழகாகச்
சிரிப்பா! அதைப் பார்த்து
நான் மகிழ்வேன்!

கிழ: கொடுத்து வைத்தவனடா நீ!

பை: தாத்தா!

கிழ: என்ன தம்பி

பை: உங்களைஒன்று கேட்கவா?

கிழ: ஒன்றென்ன
ஓராயிரம் கேளப்பு!

பை: உங்கள் பாட்டி
இருக்கிறாவா?

கிழ: எனக்கு, பாட்டியே
இருந்ததில்லை!

பை: ஏனப்பு?

கிழ: நான் தனிமரம்
கலியாணம் ஆகாதவன்!
கட்டைப் பிரமச்சாரி.

பை: ஏன்?

கிழ: எனக்கு, அக்கா இரண்டு
தங்கைகள் நான்கு,
அறுவரும் கரைசேர
இல்லறசாகரத்தில் குதித்துக்
குளிக்கும் பருவம் எனக்குக்
கடந்து விட்டது என்றனர்
முதியவர்!

பை: தாத்தா!

கிழ: அ.!

பை: நானொன்று கேட்டால்
நீங்கள் கோபிக்கக்கூடாது!

கிழ: கோபமா? உன்னோடா?
எனக்கா? இல்லைக்
கண்ணா! கேள்

பை: இரண்டு நல்லவர்கள்!
நீங்கள் ஒன்றாய் இருந்தால்!

கிழ: ஆர் தம்பி?

பை: என் பாட்டியை நீங்கள்
கட்டிக்கொண்டாலென்

கிழ: தம்பி! கண்ணா! நாம்மிகப்
பழமையானவர்,
கல்தோன்றி
மண்தோன்றாக் காலத்தே
எவ்வாறோ வாளொடு
முன்தோன்றியவர்!

பை: புழுகு மூட்டை தாத்தா!
அதைவிடுங்கள்! நான்
கேட்டதற்கு உங்கள்
பதிலென்ன தாத்தா?

கிழ: எதைச் சொல்ல நான்?

பை: உங்கள் சம்மதத்தை!

கிழ: கிழட்ட யானைக்குக்
கட்டையில் போகும்
வயதில் மதம்
பிடித்துவிட்டதென்பார்கள்!
மகனே! நீ! மிகமுந்திப்
பிறந்துவிட்டாய்!
நூற்றாண்டு பல பிந்தி
இங்கு பிறந்திருக்க
வேண்டியவன்!

பை: அப்போ, உங்கள் பதில்?

கிழ: ஆகாது மகனே! தம்பி!
என்னிடம் கேட்டதை
பாட்டியிடம்
சொல்லிவிடாதே!

பை: நீங்கள்வேண்டாமென்றால்!
இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழ: நல்ல பிள்ளை!

பை: நல்ல சம்பந்தம்,
போகட்டும்! தாத்தா!
எங்கள் வீட்டுக்கு வந்து
போகலாம்தானே?

கிழ: நிச்சயம் வருவேன்!
உன்னைக் காண!

பை: அடிக்கடி வாருங்கள்!

கிழ: இல்லைக் கண்ணா!
இடைக்கிடை!

பை: ஏன்?

கிழ: அடிக்கடி வந்தால் கிழடு
தட்டிய எங்கள்சனம்
கதைபுனையும்! களிசடை
மனங்கள்!

பை: தாத்தா! இவர்கள் எப்போ
மனிதராவார்கள்?

கிழ: மகனே! நீ மனிதனாய்
வளரும்போது! போய்
வா மகனே!

பை: நல்லது தாத்த! வருகிறேன்!

கிழ: வா!

வைத்தி: எப்பிடிதம்பியவை, பிள்ளையள், ரெண்டுபேற்றையும்விளையாட்டு?

கவிதா: நல்லா இருக்கு! நல்ல வடிவா நடிச்சீங்கள்!

சுப்பிர: என்னக்கென்ன நடிப்பு? உள்ளதைச் சொன்னது தானே! இரத்தினம் தான் பெடியனா நடிக்க வேண்டிக்கிடந்திது!

சங்கர்: அழகானந்தமையா வடிவா எழுதி இருக்கிறீங்கள்.

ராஜ: ஓ மையா! முதுமை சிருஷ்டியின் காலம் எண்டு சொல்றவை.

மல்லி: அதாலைதான் ஒவ்வொருத்தரும் இளமையில் ரெண்டாவது துறை ஒண்டை வளர்த்துக்கொள்ள வேணும் எண்டு சொல்றது.

இரத்தி: கலை இலக்கியம் கடைசி காலத்திலை ஒருத்தருக்கு கை குடுக்கும்! இல்லையேல் இந்த வயதிலை விசர் வந்திடும்.

கவிதா: எங்களுக்கும் நேரமாகுது, இனிப் போக வேணும்.

விசாலா: போகப் போறியளே பிள்ளையள்? **(சோகம் தெரிகிறது)**

அழகா: நீங்கள் வந்து மனப்பாரங்களைக் குறைச்சிருக்கிறீங்கள்.

சுப்பிர: அடிக்கடி வந்து போங்கோ பிள்ளையள்!

வைத்தி: ஒவ்வொருநாளுமே வருவியளெண்டால்!

**-இரத்தினம் ஒரு புறமாக ஒதுங்கி நிற்பதைக் கண்ட ராஜன்-**

ராஜ: ஐயா! போய் வாறம்!

**-அவரால் இதற்கு மேல் நடிக்க முடியவில்லை. உடைந்து போகிறார். ராஜனை அணைத்துக் கொண்டு கண்ணீர் வடிக்கிறார். அதே போல விசாலாட்சியிடம் சென்ற மல்லிகா-**

மல்லி: ஆச்சி போயிட்டு வாறம்!

**-விசாலாட்சி மல்லிகாவின் இருகைகளையும் பற்றிக் கொண்டு, தளர்ந்த நிலையில்-**

மல்லி: நல்ல இருப்பியள் ராசா! ஆண்டவன் உங்களுக்கு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையும் வைக்கார்!

-இந்த உணர்வின் இறுக்கத்துள், செறிவினுள் அனைவருமே ஆட்பட்டு விடுகின்றனர். அழகானந்தத்தார் ஒருவாறு சுதாரித்துக் கொண்டு-

அழகா: சரி, பிள்ளையள் போய் வாருங்கோ! வீட்டிலை தேடுவினம்!

-அவர்கள் நாடியைத் தடவி, மேனியைத் தொட்டு விடை கொடுக்கிறார்கள். இளையவர்கள் அமைதியாகச் செல்கிறார்கள்- இவ்வேளை பின்வரும் பாடல் பாடப்படுகிறது. இரத்தினம் பாடுவாராயின் நல்லது-

பாடல்:

நாடகத்தால் உன் அடியார்
போல் நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான்
மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகம் சீர் மணிக் குன்றே
இடையறா அன்பு உனக்குஎன்
ஊடகத்தே நின்று உருகத்
தந்தருள் எம் உடையானே!

- திருவாசகம் - அறிவுறுத்தல் - 1 -

-நாடகமாயின் இத்தோடு முன்திரை மூடிக்கொள்ளும். ஆயினும் வாழ்வு எனும் நாடகத்துள் எத்தனை அடியவர் தத்தம் முகத்திரை, முன்திரைகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர். இந்த இளைஞர்களது வாழ்விலேனும் திரைமூடாது கிடக்க வேண்டி முன்திரை மூடாது திறந்து கிடக்கிறது. "நாடகம்" தொடர்கிறது- சதாசிவம் பாடலின் முடிவை அண்டிய பகுதியில் வந்து ஒரு ஆசனத்தில் அமர்ந்து வெற்றிலை போட்டுக் கொள்வார். சிறிது பொழுதால் கபிலன் அங்கு வருவான்-

கபிலன்: அம்மப்பா!

சதாசி: ......(அவர் வாய்க்குள் உள்ள வெற்றிலை பாக்கை கபிலன் கண்டு விடுவான் என்ற களவில் பேசாது இருப்பார்)

கபில: (உரத்து) அம்மப்பா!!

சதாசி: (வேறுவழியின்றி) இம்!!

கபில: (வேண்டுமென்று, பேசவைக்க) அம்மப்பா! இப்ப எத்தினை மணி இருக்கும்?

சதாசி: இம்! (என்றவாறு 5 மணி எனக் காட்ட, விரல்களை விரித்துக் காட்டுகிறார்)

கபில: அக்காவை இன்னும் காணன்!

சதாசி: இம்!!

கபில: அக்கா ஏன் இன்னம் வராமல் நிக்கிறா?

சதாசி: இம்!! .. இம்!!

கபில: வாங்கோவன் ஒருக்கா உலாத்திக் கொண்டுவருவம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சதாசி:** இம், இம்!! **(முடியாதென்கிறார் போலும்)**

**கபிலை:** அம்மப்பா! ஏன் வாயைத் திறக்கிறீங்களில்லை.

**சதாசி:** இம்ம்..!

**கபிலை:** ஓகோ! வெத்திலை போட்டிருக்கிறீங்களோ? ஆ! கா! அம்மம்மாட்டைச் சொல்றன்!

**சதாசி:** இம்! சொல்லாதை **(என்று கொன்னை தட்டுகிறார்)**

**-அவ்வேளை சரஸ்வதி வந்து-**

**சரஸ்:** உதென்ன தின்னிறீங்கள்? வெத்திலையோ? அடக்கடவுளே!!!

**கபிலை:** அம்மம்மா! கத்தாதையுங்கோ!

**சரஸ்:** டொக்டர்சொல்லிஇருக்கிறர், வெத்திலைதின்னவேண்டாமெண்டு! ஓ! இந்த மனிதனை என்ன செய்யிறதெண்டு எனக்குத் தெரிய இல்லை! இஞ்ச! சுருளோடை வச்சு நடக்குது கச்சேரி, பக்கவாத்திய சகிதம் இதார் வேண்டிக்குடுத்தது இவருக்கு கபிலன்! நீயே?

**கபிலை:** ஓம் அம்மம்மா! பாவம் சாப்பிடட்டன்!

**சரஸ்:** பாவமோ? எல்லாருமாச்சேந்து என்னைமூளியாக்கிப் போடுங்கோ!!!

**சதாசி:** கண்டறியாத டொக்டர்! அவர் என்னத்தைத் தின்னவிட்டவர்? வெத்திலை இல்லை! சுறுட்டில்லை! பழம் இல்லை! பால் இல்லை! பருப்பில்லை! நெய்யில்லை! ஒரு மண்ணாங்கட்டியுமில்லை!! தவிட்டுப்பாணும் மரணக்கச்சல் மாமெய்ட்டும்தான் எனக்கு!!

**சரஸ்:** பின்னை எல்லாத்தையும் திண்டு போட்டு, எல்லாருக்கும் முன்னம் போங்கோ!!

**சதாசி:** இப்பிடிச் சாப்பிடாமல் கிடந்து சீவிக்கிறதைவிட திண்டிட்டுச் சாகிறது மேல்!!

**காயத்:** **(வந்தபடி)** இதென்ன!! நெடுக ரெண்டு பேரும் சண்டை!

**கபிலை:** பூனரி, நாகதேவன் கோட்டை!

**காயத்:** கபிலன்! **(இதென்ன பழக்கம் என்பதே பொருள்)**

**சதாசி:** காய்த்திரி! அம்மா என்னைப் பேசிறா! சரியாப் பேசிறா!

**காயத்:** நீங்கள் ஏதும் குழப்படி விட்டிருப்பீங்கள்!

**சதாசி:** வெத்திலை சாப்பிட்டதுக்கு இப்பிடிப் பேசிறதே?

**சரஸ்:** பேசாமல் தூக்கித்தலையிலை வச்சாடுங்கோ!

**சதாசி:** பாத்தியே! பேசிறா! பேசிறா!

**காயத்:** அம்மா! இடைக்கிடை வெத்திலை சாப்பிட்டாலென்ன?

**சரஸ்:** என்னவோ? ... மகளும் தகப்பனும் என்னவும் செய்யுங்கோ!

**-சரஸ்வதி உள்ளே செல்கிறார். அவ்வேளை மல்லிகா வெளியே இருந்து தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீட்டிற்குச் செல்கிறாள். மரகதம் செட்டியில் இருப்பதைக் கண்டு உள்ளேஇருந்து வந்து மகாலட்சுமி-**

மகால: உங்களுக்கு எத்தினை தரம் சொல்றது? ஏன் திரும்பத் திரும்ப இதிலை வந்து இருக்கிறீங்கள்? எழும்புங்கோ!!

மல்லி: அம்மா!! சும்மா இருங்கோ!. அப்பம்மா! வாங்கோ! ஒரு இடத்துக்குப் போகவேணும்! கால்முகம் கழுவி வெளிக்கிடுவம்! அம்மாவுந்தான்!

மகால: எங்க?

மல்லி: நீங்கள் வாங்கோவன் சொல்றன்!

**-மூவரும் உள்ளே செல்கின்றனர். அவ்வேளை, கவிதா வெளியே இருந்து வருகிறாள். கனகசபை, கமலம், கதிர்காமநாதன் ஆகியோரும் உள்ளே இருந்து வந்திருக்கின்றது தெரிகிறது-**

கனக: என்ன கவிதா! இவ்வளவு நேரம் முதியோர் இல்லத்திலை இருந்தீங்களா?

கதிர்: நல்ல அனுபவமா இருந்தது போல?

கவிதா: ஓம்! நிறைய நல்லா இருந்திது! நல்ல அனுபவம். ரெண்டு மணிக்கே கம்பசுக்கு வந்திட்டம்!

கமல: அங்கை என்ன செய்தனீங்கள்?

கவிதா: எங்கடை உணர்வுகளை உடனடியா எழுதிறதும் நல்லதெண்டு சொல்லிச்சினம்.

காயத்: எழுதினதை கொண்டந்தீங்களா? குடுத்திட்டு வந்திட்டீங்களா?

கவிதா: வாசிச்சுக் காட்டீட்டுக் கொண்டந்திட்டம்!

கனக: நல்லது! கால்முகம் கழுவிட்டு, ஏதும் சாப்பிட்டிட்டு, எங்களுக்கு அதை வாசிச்சுக் காட்டவேணும்!

கவிதா: பாட்டா! நீங்கள் நினைச்சதை நான் ஒழுங்கு செய்திட்டன்!

கனக: என்னது?

கவிதா: நான், சங்கர்...

காயத்: ஓ! **(என்ன? என்று ஆவலாகக் கேட்பது போல உள்ளது)**

கவிதா: ராஜன், மல்லிகா நாலுபேரும் எழுதினதுகளை உங்களுக்கு வாசிக்கப்போறம்!

கதிர்: அப்படியா? வெறிகுட்!

கவிதா: அவேன்ர வீட்டுக்காரரும் வருவினம்!

கமல: அதுதான் நல்லது!

கவிதா: இண்டைக்கு ஒரு விசேஷமான நாள்!

கனக: என்ன விசேஷம் கவிதா?

கவிதா: அதுமட்டும் 'சஸ்பென்ஸ்'! சங்கர் வந்தாப்பிறகு அதை நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாருக்கும் முன்னாலை அறிவிப்பன்! அதுக்காகத்தான் அவையை வரச் சொன்னனான்!

**கபில:** அக்கா! கெதியாய் போய் வெளிக்கிடுங்கோ! மற்றவை வரமுந்தி!

**-கவிதா உள்ளே செல்கிறாள். தேவையானவர் உரிய வேளைகளில் உள்ளே செல்லலாம். வர விருப்பவர்களுக்கு இருக்க மேலதிக ஆசனங்களை கபிலன் கொண்டு வந்து வைப்பான். இவ்வேளை சங்கரன், ராஜன் இருவரும் தமது விட்டுக்கு வருகின்றனர். கதிரையில் இருந்த பராசக்தி-**

**பராச:** சங்கர்!

**சங்கர்:** என்ன மம்மி!

**பராச:** நீர் எவ்வளவு சரி இல்லை!

**சங்கர்:** 'சொறி' மம்மி 'கொஞ்சம் பிந்திப் போச்சு'

**பராச:** கொஞ்சமா? எவ்வளவு பிந்திப் போச்சு! நான் வெளிக்கிட்டு எவ்வளவு நேரம் காத்துக் கொண்டிருக்கிறன்!

**ராஜு:** மம்மி ரெடியா, போறத்துக்கு!

**சங்கர்:** **(ராஜனுக்கு அமத்தலாக)** இல்லையடாப்பா! **(மம்மிக்கு)** மம்மி! முகத்திலை பவுடர் எல்லாம் சரி கணக்கா இருக்கு!

**பராச:** சும்மா சொல்நீர்! வடிவாப் பாரும்!

**சங்கர்:** போதும் மம்மி! எல்லாம் கணக்கா இருக்கு!

**ராஜு:** வடிவா இருக்கு மம்மி!

**பராச:** கொண்டை?

**சங்கர்:** நல்லா இருக்கு மம்மி!

**பராச:** எங்க, சங்கர் முன்னுக்கு இந்தக் கண்ணாடியைப் புடியும்! ராஜன், பின்னுக்கு சின்னக் கண்ணாடியைப் புடியும். அ, சரி, வடிவா இருக்கு என்ன?

**ராஜு:** ஓம் மம்மி!

**சங்கர்:** மம்மி! கவிதா வீட்டுக்கு வாங்கோ!

**பராச:** ஏன் சங்கர்?

**சங்கர்:** வாங்கோவன்! அங்க வந்து பாருங்கோவன்!

**பராச:** அப்ப நான் வெளிக்கிட்டுக் கொண்டு வாறன்!

**ராஜு:** மம்மி! இப்பவே கலியாணப் பொம்பிளை போல வெளிக்கிட்டிருக்கிறீங்கள்.

**பராச:** பப்பா எண்டால் இப்பிடி போகவிட மாட்டார்! சங்கர்! நான் பப்பா கடைசியா வாங்கித் தந்த காஞ்சிபுரத்தை கட்டிக்கொண்டு வாறன்! ஒரு நிமிஷம்!

**சங்கர்:** கெதியா மம்மி!

**-மூவரும் உள்ளே செல்கின்றனர். அவ்வேளை மல்லிகா, மகாலட்சுமி, மரகதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-மூன்புறம் வருகிறார்கள்-

*மல்லி:* அப்பம்மா, நல்ல வடிவா இருக்கிறா இண்டைக்கு!

*மரக:* நெடுகச் சொல்லாதை பிள்ளை! எனக்கு வெக்கமாக்கிடக்கு! அவர் போன பிறகு நான் நல்ல சீலை கட்டிறதை விட்டிட்டன்! இண்டைக்கு உன்ர ஆய்க்கினைக்குத்தான்...

*மல்லி:* கெதியா வாங்கோ! நேரம் போகுது!

-மூவரும் கவிதா வீட்டுக்குச் செல்கின்றனர்-

*காயத்:* வாங்கோ! வாங்கோ!

*கமலா:* மரகதம், இப்பிடி வந்திரும்!

*மரக:* எல்லாம் இவள் பிள்ளையின்ர கூத்து!

*கனக:* அவேன்ர ஆசையளுக்கும் நாங்கள் இடங்குடுக்கவேணும்!

*கதிர்:* மகாலக்ஷமி! இருங்கோ!

-பராசக்தி, சங்கர், ராஜன் வெளியே வருகின்றனர்-

*பராச:* சாறி வடிவா இருக்கா மகன்!

*சங்கர்:* ஓம், மம்மி!

*ராஜ:* வாங்கோ போவம்!

-இவர்களும் கவிதா வீட்டுக்கு வருகின்றனர், அப்பொழுதுதான் கவிதாவும் உள்ளே இருந்து வெளிவருகிறாள்-

*கவிதா:* வாங்கோ சங்கர்!

*காயத்:* மம்மி! இப்பிடி இருங்கோ!

*பராச:* பப்பா இல்லாமல் நான் வெளிக்கிடுறதில்லை!

*கமலா:* எல்லாம் எங்கடை கவிதாவின்ர கூத்துத்தான்!

*கவிதா:* சரி! வந்தாச்சு! இண்டைக்கு எங்களுக்கு ஒரு முக்கியநாள்! அதை கொண்டாடத்தான் இங்ககூடி இருக்கிறோம்! இண்டைக்கு, சங்கர் மரிபண்ணப்போற, அவற்றை மாமன் மகளின்ர பிறந்தநாள்! சங்கர்! ஞாபகம் இருக்கா?

*சங்கர்:* அட! நானும் அதை மறந்திட்டன்!

*கவிதா:* அதை, இங்க, இப்ப கொண்டாடுவம்!

*கதிர்:* (மிகுந்த உற்சாகத்தோடு) கட்டாயம் கொண்டாடுவம்! என்ன காயத்திரி?

*காயத்:* ரெட்டிப்பு மகிழ்ச்சியோடு கொண்டாடுவம்!!

-இரட்டிப்பு மகிழ்ச்சி என்பதன் உள்ளுறை பொருளை, அங்கு அறிந்தவர் மட்டும் அறிவர். இதனை அடுத்து அங்கு கபிலன் அனைவருக்கும் வசதிபோலச் சிற்றுண்டி, தேநீர் பரிமாறுவார் என்க-

*ராஜ:* சங்கர்! கள்ளா! நீ எனக்கும் சொல்லஇல்லை என்ன?

*பராச:* பப்பாவுக்கு இப்பிடி 'ஒக்கேஷன்ஸ்' எண்டா நல்ல விருப்பம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சதாசி:** சரஸ்வதி! நானும் பங்கு பற்றட்டே?

**சரஸ்:** என்னத்திலை

**சதாசி:** சாப்பாட்டிலை! தயவு செய்து! இண்டைக்கு மட்டும்!!

**சரஸ்:** சரி! போகட்டும்! பிறகு மருந்து ஒழுங்கா விழுங்க வேணும்!

**சதாசி:** ஓ!!!..!

**கவிதா:** சரி! சங்கர்! வாசியுங்கோ! நீங்கள் தொடங்குங்கோ முதல்லை!

**கனக:** நல்லது! செவிக்கின்பம் வரட்டும்.

**சங்கர்:** முதுமை என்பது
மரணத்தைக் காத்திருத்தல்லல்!
அது மனிதத்தின் பொற்காலம்!
இளமையில், வாலையில்,
வயது வந்த வேளையில்
வாழ்க்கை சோலையில்
பறித்த மலர்களை தெரிந்து
மாலை தொடுக்கும்
சிருஷ்டிப் பருவமது!
பயனுள்ள பொற்காலம்!

**சதாசி:** சரஸ்வதி! கேட்டீரே!
பயனுள்ள பொற்காலம்
பட்டினிக் காலமல்ல!

**கவிதா:** முதுமை என்பது
வாழும் மரணமாம்!
சொல்கிறார்கள்
கேள்விச் செவியர்கள்!
மரணம் என்பது
மரிக்கும் அன்று வருவது!
அன்று மட்டுமே நிகழ்வது
ஒருகணம், ஒருநொடி
முந்தி வர முடியாது
நின்று தவிப்பது மரணம்தான்!
முதுமையல்ல!
மரணமே!
வேளைவரும்போதுவந்துநில்!
அந்த
வேளைவரும்வரைநொந்துநில்!
முதுமைக்கு இங்கு வேலை
இருக்கிறது!
மரணத்துக்கு அஞ்ச
அதற்கு நேரமில்லை!
போய்வா!
வேளைவரும்போதுவந்துநில்!
வேலை முடித்து வருகிறேன்!

**பரா:** பப்பாவுக் கெண்டா நல்ல
விருப்பம்! இப்பிடி இதுகள்!

**ராஜு:** 1-6.1981 இல்
எங்கள்நூலகத்தைஎரித்தார்களே
என்று
ஆத்திரம் காட்டிப்பேசி
எங்கள் படிப்புப் பற்றை
பறை சாற்றிக் கொள்வோம்.
எங்கள்மத்தியில், நாளொன்றில்
எத்தனை நூலகங்கள்
எரிகின்றன?
எமக்கு எதுவுமே தெரியாது?
வீட்டுக்கு வீடு
முதுநிலை நூலகங்கள்
மூத்த புத்தகங்கள்
எத்தனை எத்தனை,
கவனிப்பாரற்று
தூசுபடிந்து
செல்லரித்தக்கிடக்கின்றன!
அவற்றை
தொல்லை தீர்ந்ததென்று
கொள்ளி செருகி
தீக்கடன் புரிகிறோம்!
எத்தனை எத்தனை,
நூலகங்கள்,
அறிவுப் பெட்டகங்கள்
திறக்கப்படாமலே
எரிக்கப்படுகின்றன!
'முதியவன்ஒருவனின்இறப்பில்
மாபெரும் நூலகமொன்று
எரிகிறது!' என்று சொன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆபிரிக்கப் பண்பாடு
வாழ்க!

**கனக:** "முதியவன் ஒருவனின்
இறப்பில் மாபெரும்
நூலகமொன்று எரிகிறது"
ஆஹா! அருமையாகச்
சொன்னார்கள்!

**கமல:** முதியவள் ஒருத்தியின்
இறப்பில் சிறியதொரு
புத்தகமேனும் எரியாதோ?

**கதிர்:** ஏன்எரியாது? தாயின்இறப்பில்
தேசமே எரியும்! தொட்டில்
தொடக்கம் சுடுகாடுவரை
எரியும்!

**மல்லி:** கல்தோன்றி
மணிதோன்றாக்காலத்துத்
தோன்றிய
தமிழனுக்குப்பின்வந்ததமிழன்,
தலைவன் தலைவியை
கிழவன் கிழவி என்றான்!
அவன் தலைமுறை
இன்று
'பழசு' என்கிறது!
ஆங்கிலத்தில்
தொண்ணூறு எனக்கூறி
முதுமையை நகைக்கும்
அந்நியப் பட்டகாலமிது!
மரத்தின் கிளை குனிந்து
தன் ஆணிவேரைத்
தானே பிடுங்கும்
கலியுகம் இது!
மனிதம் மரித்து
அவனவன்
அவனிலிருந்தேஅந்நியப்பட்டு
சூனியத்துள்கிடக்கும்காலமிது!
அந்நியரல்ல
இதன் அந்நியமே
இதன் அழிவுக்குக் காரணம்!

**சரஸ்:** மரத்தின் கிளை குனிந்து
தன் ஆணிவேரைத்
தானே பிடுங்கும்
கலியுகம்!
ஆஹா! அருமை!...
மகளே!
நீ, பெரியவளானபோது
மனமகிழ்ந்து
உன் தாயைப் பெற்றவர்,
உன்தந்தையின்தாய்தந்தையர்,
உன் தலையில்
பால்றுகு வைத்து,
"ஆல்போல் தளைத்து
அறுகு போல் படர்"
என்று வாழ்த்தினர்.
காரணம், நீ
அவர்களதுகிளையின்விழுது!
கொடியின் வேர்!
எனவே,
உனக்கொரு கடமை
இருக்கிறது!
மண்ணில் விழுதூன்றிக்
கிளையைத் தாங்கவும்
வேராய்ப் படர்ந்து
கொடியைப் பரப்பவும்
உனக்கொரு கடமை
இருக்கிறது!
செய்வாயா? செய்!
செய்தால்
உன்குலக்கொடி
உயர்ந்தோங்கி
பட்டொளி வீசிப் பறக்கும்!
உன்தாயின் தாய்மரம்
நிமிர்ந்து நிற்கும்!
சிலிர்த்து நிற்கும்!

**கபில:** அடே அப்பா!!
அம்மம்மா வெளுத்து
வாங்கிறா!!

**கனக:** என் தங்கை
சரஸ்வதியல்லவா!!

**சதாசி:** என்னைப் பார்த்து
'தள்ளாத வயது, பாவம்'!
என்கிறீர்கள்.
நான், எதனைத்தள்ளவில்லை?
எங்கு தள்ளவில்லை?
வாழ்க்கையைத்தள்ளித்தள்ளி
அதுவும் என்னைத்
தள்ளவில்லை!
தள்ளமை வந்துவிட்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றா சொல்கிறீர்கள்?
நான் வாழ்க்கையைத்
தள்ளவில்லை!
நான், வாழ்க்கை நடத்திக்
கொண்டிருக்கிறேன்!
மனையாள் மக்களோடு!
பேரன் பேர்த்திகளோடு!
பூட்டன் பூட்டிகளோடு!
அயலவரோடு!
உறவு சுற்றத்தோடு!
ஆலயத்தோடு!
ஊர் தேசத்தோடு!
உலகோடு!
பிரபஞ்சத்தோடு!
நான் வாழ்க்கை நடத்திக்
கொண்டிருக்கிறேன்!
என்னைப் பார்த்து,
'தள்ளாத வயது, பாவம்'
என்று சொல்ல
உங்களுக்கென்ன துணிவு?

**கபில:** அடபேய்!! இதற்காக
அம்மப்பாவுக்கு மாம்பழம்
கொடுக்கலாம்! பொச்சந்நீர
வெற்றிலை சுறுட்டும்
கொடுக்கலாம்!

**கவிதா:** எங்க! இனிப்பாட்டி!

**கமலா:** என்னை
"ஊத்தைக்கிழவி"
என்றவன் யார்?
வாழ்க்கை
எழுதிக்கிழித்துக்
கசக்கி எறிந்த
குப்பைக்கடதாசியல்ல நான்!
மானுடத்தின்
வரலாறு பதியப்பட்ட
மனித ஆவணம்!
புனிதப் பொன்னேடு, நான்!
நான்,
ஊத்தைக் கிழவியல்ல!
வேண்டாத காலவழுவல்ல!
சாறு பிழிந்து சக்கையல்ல!
சேறு படிந்த கந்தையல்ல!
நான், ஒரு
முதுநிலைப் பிரஜை!
மூத்த குடிமகள்
இந்த நாட்டின்
கௌரவப் பிரஜை!
எனது மக்களின்! சுற்றத்தின்
கிழவி! தலைவி!
ஆம்!!

**கபில:** என் பாட்டிக்கு சன்னதமே
வந்து விட்டது! சரி, இனி
பாட்டன் பாடு எப்படி?
பார்ப்போம்!

**கனக:** "எண்பது வயதுக்கிழம்"
என்கிறீர்கள்,
என் உடலைப் பார்த்து,
அதுவல்லவே நான்!
அதற்குள் இருக்கும்
உள்ளத்தின் உயிரல்லவா!
நான்!
அதற்கு ஏது வயது?
ஆண்டுகளோடு
பிணைப்பில்லையே அதற்கு!
தேங்காய் என்றால்
சிரட்டையும் பொச்சுமா
அதன் சாரம்?
சொட்டும், இளநீருமல்லவா
முற்றிப் பழுத்த
செத்தலாயினும்
உள்ளிருப்பது
இளநீரல்லவா?
சொட்டைத்துருவிப்
பிழிந்தால்?
பால்!
அதனைக் காய்ச்ச?
எண்ணெய்!
இவை சாரத்தின்
சாரமல்லாவா?
கூரையும் சுவரும்
ஒன்பது வாயிலுமா வீடு?
வாழ்ந்த வாழ்வின்
பேறல்லவா அது!
அந்தப் பேறு தரும் இன்பம்!
அதன் சுகம்!
அதுவல்லவா நிஜம்!
அந்தநிஜம் குடியிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகம்,
அது கோயில்!
அது பிரம்மம்!
பிரமத்தின் வயது எண்பதா?
எண்ணுறா?
எண்ணாயிரம் கோடியா?
அல்லது
கோடானு கோடிகளா?
எது? சொல்லுங்கள்?
ஏன் மலைக்கிறீர்கள்?

**-இவ்வேளை முன்புறம் இருந்த குற்றிகளொன்றில் குந்தியிருந்த இரத்தினம் பின்வரும் பாடலை பாடுகின்றார்-**

**பாடல்:**

எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி!
மனத்திற் சலன மில்லாமல்,
மதியில் இருளே தோன்றாமல்,
நினைக்கும் பொழுது நின்மௌன
நிலை வந்திடநீ செயல்வேண்டும்,
கனக்குஞ் செல்வம், நூறு வயது,
இவையும் தர நீ கடவாயே.

- பாரதிபாடல் - விநாயகர் நான்மணிமாலை - 07-

**-இதனை அடுத்து சுப்பிரமணியம் பின்வரும் பாடலை ஓதுகிறார்-**

**பாடல்:**

பொன்னார்ந்த திருவடியைப் போற்றியிங்கு
புகலுவேன் யானறியும் உண்மை யெல்லாம்
முன்னோர்கள் எவ்வுயிரும் கடவுள் என்றார்,
முடிவாக அவ்வுரையை நான் மேற்கொண்டேன்,
அன்னோர்கள் உரைத்ததன்றிச் செய்கையில்லை
அத்வைத நிலை கண்டால் மரணமுண்டோ
முன்னோர்கள் உரைத்த பல சித்தரெல்லாம்
முடிந்திட்டார், மடிந்திட்டார், மண்ணாய்விட்டார்.

- பாரதிபாடல் - சுயசரிதை- பாரதி அறுபத்தாறு - 4 -

**-அடுத்து பின்வரும் பாடலை கனகசபை பாட விரும்புவார் போலும்-**

**பாடல்:**

அச்சத்தை வேட்கைதனை அழித்து விட்டால்
அப்போது சாவுமங்கே அழிந்து போகும்
மிச்சத்தைப் பின் சொல்வேன், சினத்தை முன்னே
வென்றிடுவீர், மேதினியில் மரணமில்லை,
துச்சமெனப் பிறர்பொருளைக் கருதலாலே
சூழ்ந்ததெல்லாம் கடவுளெனச் சுருதி சொல்லும்
நிச்சயமாம் ஞானத்தை மறத்த லாலே,
நேர்வதே மானுடர்க்குச் சினத்தீ நெஞ்சில்.

- பாரதிபாடல் - சுயசரிதை-பாரதி அறுபத்தாறு-07-

**-இப்பாடல்கள் அத்தனையும் பாடப்பட வேண்டுமென்ற நியதிஇல்லை. எதையுமே பாடாமலும் விடலாம்- திரை உரிய நேரத்தில் மூடிக்கொள்ளும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுமை என்பது
வாழும் மரணமாம்!
சொல்கிறார்கள்
கேள்விச் செவியர்கள்!
மரணம் என்பது
மரிக்கும் அன்று வருவது!
அன்று மட்டுமே நிகழ்வது
ஒருகணம், ஒருநொடி
முந்தி வர முடியாது
நின்று தவிப்பது மரணம்தான்!
முதுமையல்ல!
மரணமே!
வேளை வரும்போது வந்துநில்!
அந்த
வேளைவரும் வரை நொந்து நில்!
முதுமைக்கு இங்கு வேலை இருக்கிறது!
மரணத்துக்கு அஞ்ச
அதற்கு நேரமில்லை!
போய்வா!
வேளை வரும் போது வந்துநில்!
வேலை முடித்து வருகிறேன்!

–குழந்தை ம. சண்முகலிங்கம்

**பத்மாஸ்,** 28/1, ஓட்டுமடம் வீதி, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org